Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 21 (25.03.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :173



சுட்டு வீழ்த்தப்பட்ட அப்பாச்சே ஹெலியை தன் குழந்தைகளுக்குக் காட்டித் திரும்பும் ஈராக்கியத் தந்தை.



ஹெலி வீழ்த்தப்பட்ட மகிழ்ச்சியை ஆடிப் பாடிக் கொண்டாடும் ஈராக்கிய மக்கள்

# அப்பாச்சே ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

## ஈராக்கிய விவசாயிகள் தாக்குதல்

(பக்தாத்)

**ஈராக் போரில், நேற்று தாக்குதலில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் மிக நவீன ரக அப்பாச்சே (APACHE) தாக்குதல் ஹெலிகொப்ரர் ஒன்று ஈராக்கிய விவசாயிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.**


பக்தாத்திலிருந்து 110 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கர்பாலா நகரில் இந்த ஹெலிகொப்ரர் வீழ்ந்துகிடக்கும் படங்களை ஈராக்கியத் தொலைக்காட்சி ஒளி பரப்பியது.

தம்மீது விமான எதிர்ப்புப் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாக, அமெரிக்க இராணுவத்தின் ஐந்தாவது படைப்பிரிவின் விமானிகள் தெரிவித்துள்ளனர். தாக்குதலுக்குள்ளாகி வீழ்ந்த ஹெலியில் இரு விமானிகள் இருந்துள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை என அவர்கள் தெரிவித்தனர். தாக்குதலில் தப்பிவந்த ஹெலிகொப்ரர்களிலும் துப்பாக்கிச் சூட்டுத் துவாரங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்துக் கருத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் நம்பகமான ஹெலி!




1975 முதல் அமெரிக்கப் படையினரின் முக்கிய தாக்குதல் ஹெலிகொப்ரராக அப்பாச்சே **(AH-64 Apache)** விளங்கி வருகிறது. இது இரண்டு விமானிகள் பயணிக்கக்கூடியவாறும் - குறுந்தூர, நெடுந்தூரத் தாக்குதலை இரவிலோ, பகலிலோ நடத்தக்கூடியவாறும் வடிவமைக்கப்பட்டதாகும். மணிக்கு 362 கிலோமீற்றர் வேகம் கொண்டதாகும். 1200 தடவை சுடக்கூடிய 30 எம்.எம். தன்னியக்கப் பீரங்கிகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

வெப்ப உணர் விடியோ படங்கள் மூலம், விமானிக்கு தாக்குதல் இலக்குகளை இனங்காட்டக்கூடிய ரடார் தொழில்நுட்பம், மேல் விசிறிக்கு மேல் பொருத்தப்பட்ட வட்ட வடிவ (10 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 3 சீனர்களின் சடலங்கள் வல்லிபுரம் பகுதியில் ஒதுங்கின

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்ட சீன மீன்பிடிப் படகில் இருந்து காணாமற்போன, மேலும் மூன்றுபேரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன், சிதைந்த நிலையில் வடமராட்சிக் கடற்பரப்பில் கரையொதுங்கின.

துன்னாலை வல்லிபுர ஆழ்வார் கோவில் தீர்த்தக் கரையை அண்டிய கரையோரப் பகுதியில் ஒதுங்கிய இந்த சடலங்களை அந்தப் பகுதி மீனவர்கள் கண்டனர்.

மேற்படி சடலங்கள் தொடர்பாக நேற்றுக்காலை அப்பகுதி மக்கள் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்திருந்தனர். இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள், கப்பல்களுக்கான தரிப்பிட வசதி

# இலங்கையின் உதவியை அமெரிக்கா கோரவில்லை

எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, அமெரிக்கா தனது படைகளுக்கான தங்குமிட வசதிகள் எதையும் இலங்கை அரசிடம் இதுவரை கோரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கப் போர்க் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் இலங்கையில் தரித்து நிற்கும் வசதியையும் எரிபொருள் வழங்கலையும் செய்வதற்கு, இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முன்னதாக ஓர் ஒப்பந்தம் காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஈராக் போர் ஆரம்பித்த நிலையிலும் இந்த வசதிகளை அமெரிக்கா இலங்கையிடம் இதுவரையில் கோரவில்லையெனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சிகள், அரசை அமெரிக்கச் சார்பானதாகக் காட்டிப் போராட்டங்களை நடத்தலாம் என்பதால், ரணில் அரசை சிக்கல்களுக்குள் கொண்டுசெல்ல அமெரிக்க அரசு விரும்பாமல் இருக்கலாம் என எதிர்க்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கல்வி வலயங்கள் முன்பாக தொண்டராசிரியர் போராட்டம்



தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களுக்கு முன்பாக தொண்டராசிரியர்கள் நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 7 மணிமுதல் மாலைவரை இம்மறியற் போராட்டத்தில் தொண்டராசிரியர்கள் ஈடுபட்டனர்.


நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் - தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய ஐந்து வலயக்கல்வி அலுவலகங்களுக்கு முன், கொளுத்தும் வெயிலில் அலுவலக வாயிலை மறித்து இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



மட்டு. அம்பிலாந்துறையில் நடந்த உழவர் விழா. உள்ளே மாவட்டத் தளபதி ரமேஷ், விவசாயி ஒருவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

### விண்ணாணம் விநாசியர்



அட ...ச்சே அவ்வளவுதானே அப்பாச்சே!

# இலங்கைக்கு உதவி வழங்க நோர்வே அரசு கோரவுள்ளது

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு

இலங்கைக்கு உதவி வழங்குமாறு உலக நாடுகளைத் தமது அரசு கோரவிருப்பதாக, நோர்வேயின் துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான யுத்தத்தால் இலங்கைக்கு கிடைக்கவிருந்த நிதியுதவிக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்ற சூழ்நிலையிலேயே, விதார் ஹெல்கிசன் இந்த வேண்டுகோளை விடுக்கவிருக்கிறார்.

இதற்கு முன்னேற்பாடாக, அடுத்த வாரம் தமது நாடு நிதியுதவி வழங்கும் உதவித் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தனது மனைவியின் தலையை கோரமாக துண்டித்த கணவன்

## ஊர்காவற்துறையில் நடந்த கொடூரம்

(யாழ்ப்பாணம்)

கணவனின் கத்தி வெட்டுக்கு இலக்காகி, மனைவி துடிதுடித்து இறந்த கோரச் சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு ஊர்காவற்துறையில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேற்குத் தெரு, ஊர்காவற்துறையைச் சேர்ந்த ம.செம்பற்சோதி (வயது 36) எனும் பெண்ணே கொல்லப்பட்டவராவார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

நீண்டகாலமாகவே குறிப்பிட்ட கணவன், தன் மனைவியை அடித்துத் துன்புறுத்திக் கொடுமைப்படுத்தி வந்துள்ளார். இதனால் - கணவன், மனைவி இருவரும் பிரிந்தே வாழ்ந்துவந்தனர்.

சம்பவதினம் இரவு, கொல்லப்பட்ட பெண், கஷ்டத்தின் காரணமாக வேலைக்குச் சென்றுவிட்டு வீட்டில் பிள்ளைகளுடன் உறங்கிக்கொண்டிருந்தார். திடீரென ஏதோ சத்தம் கேட்கவே, வீட்டின் மற்றைய அறையில் உறங்கிக் கொண்டிருந்த தனது அண்ணியின் பக்கத்தில் சென்று உறங்கியுள்ளார்.

அவ்வேளை - சில நாட்களாகவே பிரிந்திருந்த கணவன், திடீரென வீட்டினுள் புகுந்து மனைவியை கொட்டனால் தலையில் பலமாகத் தாக்கியுள்ளார். கீழே விழுந்த அவரின், தலையைத் தான் கையில் வைத்திருந்த கத்தியால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார்.

சம்பவம் நிகழ்ந்தவுடன் உறவினர் மூலம் பொலிஸாரிற்கு முறையிடப்பட்டது. தப்பியோடிய கணவனான மரிஸ்ரென் பாலா (பாலா) என்பவர் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் உதவியுடன் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பெண்ணின் சடலம் நேற்று மாலை 5 மணிக்கு யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கொலையாளி தற்போது சிறைக்காவலில் உள்ளார். (111,ரா)

# பணி நீக்கப்பட்ட சிறைக்காவலர்கள் உயர்நீதிமன்றில் மனிதஉரிமை மனு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணியாற்றிய யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 சிறைக்காவலர்கள், தம்மைத் தமது பணியில் இருந்த இடைநிறுத்தியமையை எதிர்த்து, உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் 21 இல், சிறைச்சாலை ஆணையாளரின் அறிவுறுத்தலின்படி சிறைக்காவலர் பதவிக்கு விண்ணப்பித்த தமக்கு, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட்டதாகவும் இவர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது இந்தப் பதவிகளுக்கு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந் நியமனங்களைச்செய்த பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கையை நீதிமன்றம் தடைசெய்ய வேண்டுமென்றும் மனுதாரர்களான பழைய சிறைக்காவலர்கள் 17 பேரும் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# நிப்போன் புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் இருந்து, ஜப்பானின் நிப்போன் புலமைப்பரிசிலுக்குத் தெரிவான மாணவர்களுக்கான இரண்டாவது கட்ட நிதியை, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் உடனடியாகப் பெற்று மாணவர்களுக்கு வழங்குமாறு இதற்கான யாழ். மாவட்ட இணைப்பாளரும், யாழ். மத்திய கல்லூரி அதிபருமான க.இராசதுரை கேட்டுள்ளார்.

இரண்டு நாட்களில் இவை வழங்கப்பட்டு, உரிய வவுச்சர் நாளை மறுதினம் கொழும்பில் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளதாலும், இதற்காக ஏற்படும் தாமதம், குறிப்பிட்ட மாணவருக்குரிய புலமைப்பரிசிலை ரத்தாக்கும் நிலை இருப்பதாலும் அதிபர்கள் தாமதமின்றிச் செயற்பட்டு உரிய மாணவருக்குரிய புலமைப் பரிசில் கிடைப்பதை உறுதிப்படுத்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்த பெண் உயிரிழப்பு!

## செம்மணியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோவிலுக்குச் சென்றுவிட்டு செம்மணி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்தவேளை, திடீரென் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்ததில் பெண்மணி ஒருவர் மரணமான சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கோண்டாவிலைச் சேர்ந்த தளையசிங்கம் பராசக்தி (வயது 52) என்பவரே இறந்தவராவார்.

நேற்றுக்காலை தனது சொந்த இடமான நாவற்குழியில் உள்ள கோயிலுக்குச் சென்றுவிட்டு மீண்டும் மாலை 3.30 மணியளவில் வீடு திரும்பிக்கொண்டிருந்த அவர், செம்மணி மயானத்திற்கு அருகில் வந்து கொண்டிருந்தவேளை, திடீரென நிலை தடுமாறி நிலத்தில் வழ்ந்து காயமடைந்தவர், ஓட்டோ மூலம் யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டுவரபட்டு, சிகிச்சையளிக்கப்பட்டபோதும் அது பயனளியாது மரணமானார். (ரா)

# நூலகத்திற்கு இந்தியா நூல் உதவி

யாழ்.பொது நூலகத்திற்கு ஒரு தொகை நூல்களை அன்பளிப்பாக இந்தியா வழங்கியுள்ளது. இந்நூல்கள் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் ஊடாக யாழ்.பொது நூலகத்திற்கு வழங்கப்பட்டன.

நேற்று நடந்த நிகழ்வொன்றில் - இந்தியத் தூதர், இந்நூல்களை தமிழ் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியிடம் கையளித்தார்.

# பூங்கா புனரமைக்க நிதி; தொண்டரமைப்பு மறுப்பு!

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான சுப்ரமணியம் பூங்காவைப் புனரமைப்பதற்கு நிதியுதவி வழங்கிய சர்வதேச தொண்டர் அமைப்பு, தனது நிதியுதவியினை மீளப் பெற வேண்டிவரும் எனக் கருத்து வெளியிட்டுள்ளது.

மாநாகர சபைக்குச் சொந்தமான காணியில் குத்தகை அடிப்படையில் படையினர் முகாம் அமைத்து தங்கியிருக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே.

சுப்ரமணியம் பூங்காவிற்கு அருகில் மேற்படி இராணுவ முகாம் அமையவிருப்பதால், பூங்காவைப் புனரமைத்த பின்பும் மக்கள் பூங்காவைப் பயன்படுத்த முடியாது என்பதால், மேற்படி நிதியுதவி வழங்கிய சர்வதேச தொண்டர் நிறுவனம், நிதியுதவியினை மீளப் பெறுவது பற்றித் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

மாநகரசபைக்குச் சொந்தமான காணியைப் படையினர் முகாம் அமைக்கக் கோரியுள்ளதால், சபை உறுப்பினர்கள் தற்பொழுது இல்லாத பட்சத்தில், மாநாகரசபை நிர்வாகம் காணிக் கையளிப்பு தொடர்பாக நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. (13)

## மனித உரிமை மீறல் வழக்கில்

# 10 பொலிஸார் குற்றவாளிகள்; உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பளிப்பு

(கொழும்பு)

அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக, உயர் நீதிமன்றம் ஒரே தினத்தில் 10 பொலிஸ் உத்தியோகத்தர்களைக் குற்றவாளிகளாகக் கண்டுள்ளது.

இம் மாதம் 17 ஆம் திகதி உயா நீதிமன்றம் விடுத்த நான்கு தீர்ப்புக்களின் பிரகாரம், பல குற்றங்களை இந்த உத்தியோகத்தர்கள் செய்தமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் தமது சொந்தச் செலவாக ஒரு லட்சம் ரூபா வரையிலான தொகையை நஷ்டஈடாக வழங்க வேண்டுமென்றும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டுமென்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## அகலமாக்கப்படும் ஏ-9 வீதி

ஏ-9 வீதியின் இரு புறங்களிலும் நான்கு அடி அகலமாக்கப்படவுள்ளது. இதற்காக வீதியின் இருபுறமும் ஒதுக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (115)


உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையான

யூனியன் மக்கள் கடை (கிளை இல.30)

பாவனையாளரின் நன்மைகருதி சேவை நேரத்தினை பி.ப 8 மணி வரை நீடித்துள்ளது என்பதை பாவனையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(சி/708) - மக்கள் கடை கிளை முகாமையாளர்.



சினியாத்ரா

இலங்கை திரைப்பட விழா-2003

மார்ச் 26-30

கைலாசபதி கேட்போர் கூடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

மார்ச் 26 பி.ப 4.00 - நிதானய (புதையல்)
லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்
மார்ச் 27 பி.ப 4.00 - சந்தகின்னரி (நிலவுப்பெண்)
அசோகா ஹந்தகம
மார்ச் 28 பி.ப. 4.00 - புரசந்த கலுவற (ஓர் பூரணையில் மரணம்)
பிரசன்ன விதானகே
மார்ச் 29 காலை 10 - தீர்த்த யாத்ரா வசந்த ஒபேசேகர
பி.ப 2.00 - மத்துயம் தவச (எதிர்காலத்தில் ஏதோ ஒரு நாள்) தர்மசேன பத்திராஜ
பி.ப 4.30 -பொன்மணி (தமிழ்) தர்மசேன பத்திராஜ
மார்ச் 30 காலை 10.00- பவதுக்க (பாகம் 1) தர்மசிறி பண்டாரநாயக்க
பி.ப 2.00 - பவதுக்க (பாகம் 11)
பி.ப 4.30 கருத்தரங்கு

பங்கேற்போர்: வசந்த ஒபேசேகர (திரைப்பட இயக்குநர்),
தர்மசேன பத்திராஜ (திரைப்பட இயக்குநர்),
பிரசன்ன வித்தானகே (திரைப்பட இயக்குநர்),
அசோக ஹந்தகம (திரைப்பட இயக்குநர்)
தர்மசிறி பண்டாரநாயக்க (திரைப்பட இயக்குநர்).

அனுமதி: இலவசம்

Presented by:
Trikone Arts Centre in association with Extra Mural Studies Unit in University of Jaffna, NEP/Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs and Asian Film Centre. (289)


## காணாமற்போனோர் விபரம் திரட்டப்படுகிறது

(நவிண்டில்)

1983 ஆம் ஆண்டுக்கும் 2003 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் காணாமற்போனோர் பற்றிய தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக காணாமற்போனோர் விபரங்கள் அவசரமாகத் திரட்டப்படுகின்றன.


ராஜா யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



பகவதி

10.30, 2.30, 6.30 மட்டும்.

JACKIE CHAN

RUSH HOUR - 2

இரவு 9.30இற்கு மட்டும் (26 வரை) (சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)

சத்யராஜ், சுவலட்சுமி நடித்த

ஆண்டான் அடிமை

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

HOLLOW MAN (சி-627)


# இன்றைய நாள் இனிய நாள்

25-03-2003 - செவ்வாய்க்கிழமை

மேடம் :- சிநேகிதரால் கவலை, தேகமெலிவு, பிரயாண கஷ்டம், மனப்பயம், பந்து விரோதம்.

இடபம் :- குடும்ப மனஸ்தாபம், கெட்ட சகவாசம், தனலாபம், ஆரோக்கியம்,

மிதுனம் :- வயிற்றில் ரோகம், திருடர் பயம், மனக்கவலை, தனித்த நிலை, பிரயாணம்.

கர்க்கடகம் :- இரத்தம் சம்பந்தமான ரோகம், காரிய வெற்றி, உயர்ந்த நிலை, இனசன விரோதம்.

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

சிங்கம் :- புத்திரபந்துகளால் கவலை, காரியத்தில் சோம்பல், பணப் பற்றாக்குறை, தொழில்சமம்.

கன்னி :- வியாதி, வாக்குக்கலகம், பணவரவு, இல்லச்சிறப்பு, குடும்பனுகூலம்.

துலாம் :- சரீரமெலிவு, நன்மதிப்பு, தருமகாரிய செலவு, புத்திரரால் கவலை.

விருச்சிகம் :- மனக்கவலை, பயம், பொருட் செலவு, களஸ்திர சுகம், இல்லச்சிறப்பு.

தனு :- பூமி லாபம், புத்திரரால் நன்மை, வாக்குக்கலகம், ஆபரணச் செலவு, இல்லச் சிறப்பு.

மகரம் :- அதிக பிரயாசம், மனப்பயம், தொழில் சிறப்பு, பெரியோர் மதிப்பு, நற்கீர்த்தி.

கும்பம் :- சரீரவாட்டம், வாக்குக் கலகம், நற்குணவிருத்தி, ஆயுதபீடை, தனலாபம்.

மீனம் :- இல்லச் சிறப்பு, தருமகாரிய சித்தி, பெண்களால் நன்மை, பொருள்வரவு.

## கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு

# கொமாண்டோக்களால் முடியாவிட்டால் வேறு படையணிகளை அமர்த்துங்கள்

## பாதுகாப்பு அமைச்சருக்கு ரணில் உத்தரவு

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொமாண்டோக்களால் பாதுகாப்பு வழங்கமுடியாத பட்சத்தில் இராணுவம் அல்லது வேறு படைப்பிரிவுகளைக் கொண்டு இதன் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு கொமாண்டோக்கள் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக எழுந்த சர்ச்சையையடுத்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தின் பாதுகாப்பை கொமாண்டோக்களால் உறுதிப்படுத்த முடியாவிட்டால் வேறுவழிகளைக் கையாள வேண்டியிருக்கும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சர் ராஜித சேனாரத்னவும் - பேச்சுவார்த்தைக்கான புலிகளின் குழு பாதுகாப்பாக கொழும்பு வந்து செல்வதை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# இரு திணைக்களங்களை விரைவில் அதிகார சபையாக மாற்ற முடிவு!

இரண்டு திணைக்களங்களை அதிகாரசபையாக மாற்றும் திட்டத்தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இயங்கும் பொருளாதார நடவடிக்கை குழு தீர்மானித்துள்ளது.

மதுவரித் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவற்றையே ஒரு அதிகாரசபையாக மாற்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இறைவரி அதிகாரசபையை உருவாக்குவதற்கான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுச் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்ததும் இது தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். இறைவரி அதிகாரசபை இயங்கத் தொடங்கினாலும், தற்போது மேற்படி திணைக்களங்களில் பணியாற்றும் ஊழியர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டமாட்டார்கள். ஆனால், ஊழியர்கள் ஓய்வு பெறுவதால் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படாது என்றும் நிதியமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம். கே. இரத்நாயக்க தெரிவித்தார்.

# வண்ணத்துப்பூச்சி பிடித்த ஜேர்மனியர்கள் கைது!

(கொழும்பு)

மொனராகல காட்டுப்பகுதியில் அரிய இனத்தைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகளைப் பிடித்த இரண்டு ஜேர்மனியரை வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர்.

கைதான ஜேர்மனியரிடமிருந்து 50 வண்ணத்துப்பூச்சிகளை வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் கைப்பற்றினர். வொல்ப் டிஸ்டர், நியூ பொமர் ஆகிய இரு ஜேர்மனியர்களையும் வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இவர்களை நீதிமன்றில் நிறுத்தியபோது 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# பெரிய ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த நவீன உபகரணங்கள் கொள்வனவு!

## உள்துறை அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பெரியளவிலான மக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தடுக்கக்கூடிய ஆர்ப்பாட்டத் தடுப்பு உபகரணங்கள் இலங்கையில் இதுவரை இல்லையென்றும், இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

பெரியளவிலான மக்கள் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கான உபகரணவசதிகளை இலங்கை கொண்டிராதுள்ளமை மிகவும் பின் தங்கியதொரு நிலைமையாகும்.

இப்போது ஆர்ப்பாட்டங்களைக் கலைக்கவும், அவற்றைத் தடுக்கவும் பொலிஸார் கைக்கொள்ளும் முறைகள் மிகவும் ஆபத்தானவையாகும். இந்த முறைகளைப் பின்பற்றுவதற்குச் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், கடும் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றன.

இதைவிட இத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றி வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டங்களைக் கலைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வன்முறைகளிலேயே முடிவுற்றுள்ளதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சமீப காலமாக ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் பின்னணியில் தான் அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

# எமது போர்க்கள வெற்றிகளில் கணினிகள் முக்கிய பங்காற்றின

## தமிழீழ அரசியற் துணைப் பொறுப்பாளர் தங்கன்

(யாழ்ப்பாணம்)

இன்றைய நவீன உலகத்தின் வளர்ச்சிக்கேற்ப நாமும், மக்களும் முன்னேற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காகவே தமிழீழக் கல்விக்கழகம், மாணவர் அமைப்பு எனப் பலதுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழீழ அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் தெரிவித்தார். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' என்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கணினி என்பது இன்று அனைத்து வழிகளிலும் உலகை ஆக்கிரமித்துவிட்டது. எமது போரிலும், களங்களிலும் நாம் கண்ட வரலாற்று வெற்றிகளுக்கும் கணினியின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனாலே எமது போராளிகளுக்கும் கணினி தொடர்பான அறிவை ஊட்டி வருகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(க)

## மத்திய கிழக்கிலிருந்து

# நாடு திரும்புவோரின் நலனுக்கு 50 மில்லியன் அரசு ஒதுக்கீடு!

(கொழும்பு)

மத்தியகிழக்கிலிருந்து நாடு திரும்பும் பணியாளர்களின் தேவைகளைக் கவனிக்க அரசாங்கம் 50 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மத்தியகிழக்கில் ஏற்பட்டிருக்கும் போரைத் தொடர்ந்து - அங்கிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களின் நலன்கருதியே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவசரமாக நாடு திரும்புவோருக்குத் தேவையான அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றை வழங்கவே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, மத்தியகிழக்கிலிருந்து நாடு திரும்புவோர் தொடர்பான தகவல்களைப் பிரதேச செயலகங்கள் மூலம் பதிவுசெய்யும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளதாகத் தொழில், தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

# பாடசாலைகளில் கணினி நிலையம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி!

(கொழும்பு)

இடைநிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் பாடசாலைகள் தோறும் கணினிப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளிக்க முன்வந்துள்ளது.

முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்படும் பாடசாலையில் வகுப்பறையொன்று கணினி அறையாக மாற்றப்படும். பாடசாலையின் தரத்துக்கேற்ப 10 முதல் 20 கணினிகள் வழங்கப்படவுள்ளன.

வட-கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. வட-கிழக்கில் மட்டும் 530 கணினிகள் 37 பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



பாஷையூர் புனித அந்தோனியார் றோ.க. மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் இடம் பெற்ற அணிவகுப்பு மரியாதையை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ஆ.இராஜகோபால், வித்தியாலய அதிபர் த.ஞானப்பிரகாசம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# 'சினி யாத்ரா' திரைப்பட விழா பார்வைக்கு வரும் படங்கள்

கடும் வரட்சியாலும், இனப் போராலும் அந்த நிலம் பீடிக்கப்பட்டுள்ளது. காட்டின் ஓரத்தில் இருக்கும் அந்த ஏரி அநேகமாக வரண்டு



பிரசன்ன விதானகே

போயுள்ளது. அதற்குச் சில மைல்க

### புரசந்த கலுவற

ளுக்கப்பால் ஏழைக்கிராம மக்களின் பிள்ளைகள் கொடிய உள்நாட்டுப் போரினால் இறந்து கொண்டிருக்கின்றனர். அந்தக் குளத்தில் எஞ்சியுள்ள நீரை அள்ளிக் கொண்டிருக்கும் குருட்டு வயோதிபரான வன்னிஹாமிக்கு விரைவில் மழைவரும் என்று தெரியும்.

சிறிது நாட்களுக்குப் பின்னர், ஓர் பூரணை தினத்தில் இறந்துபோன அவரது மகனின் உடல், ஓர் சீல் வைத்த சவப்பெட்டியில் வைத்து இராணுவத்தினரால் திருப்பிக்கொடுக்கப்படுகிறது. மழை பெய்யும் அன்றைய நாளில்தான் பண்டாரவின் உடலும் புதைக்கப்படுகிறது. போரில் இறந்த மகனுக்கு நஷ்டஈடாக அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணத்தை உத்தரவாதம் செய்யும் பத்திரங்களில் கையெழுத்திடுவதற்கு வன்னிஹாமி மறுத்துவிடுகிறார்.

அவரது இளைய மகளான சுனந்த, தந்தையின் சொல்லை ஏற்றுக் கொண்டு ஆடைத் தொழிற்சாலையில் வேலையொன்று தேடிக்கொள்கிறாள். அதனால், அவருடைய காதலன் சோமே, அவளுடைய விவாகமான மூத்தசகோதரி யமுனா, உள்ளூர் அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோர் அனைவரும் பத்திரங்களில் கையெழுத்திடுமாறு வன்னிஹாமியை நிர்ப்பந்திக்கின்றனர்.

பண்டார இறந்து மூன்று மாதத்திற்குப் பின்னர் வரும் வழமையான அன்னதானச் சடங்குக்குக் கொடுக்க வேண்டிய உணவுக்காக எங்காவது பணம் பெற்றாகவேண்டும். செங்கற்கள் செய்யும் தனது வேலையின் மூலமாகச் சோமேக்குக் கிடைக்கும் வருமானம் சிறுதொகையே. அவனும் முன்னர் பண்டார செய்தது மாதிரி, நல்லமுறையில் வாழவேண்டுமானால் இராணுவத்தில் சேர்ந்துகொள்வதே சரி என்று உணர்கிறான். உள்ளூர் பௌத்தபிக்கு, நாட்டுக்காகத் தன் உயிரை விட்ட மைந்தனின் பேரில் ஞாபகத் தூபியொன்று கட்டுவதற்கு



படத்தில் ஒரு காட்சி

விரும்புகிறார்.

வறுமையின் காரணத்தால் குருடாகிப்போன - மக்களின் அழுத்தத்திற்கும், நாளாந்தம் படும் கஷ்டத்திற்கும், குண்டுகளுக்குப் பலியாவதைத் தவிர வேறொன்றும் சாதிக்க முடியாத வெற்று வீரப்பிரதாபங்களுக்கும், முகங்கொடுக்கும் வன்னிஹாமி - கண்கள் பார்க்கக் கூடியவற்றுக்கு அப்பால் தெரியும் உண்மையைத் தரிசிக்கும் தெளிந்த அறிவைக் கொண்டிருக்கிறார். அவர் தன்னுடைய மகனின் சீல் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கும் சவப்பெட்டியைக் கிண்டியெடுத்துத் தகர்ப்பதற்காக மண்வெட்டியை எடுக்கிறார். இதன் மூலம், நஷ்டஈடு கொடுக்கப்படுவதைக் கோரமுடியாமல் செய்யலாம் என்று அவருக்குத் தெரியும். ஆனால், இதற்கும் மேலாக அவரது முக்கிய நோக்கம் என்னவெனில் யுத்தம் அவரது மகனைக் கொல்ல முடியாது என்று நம்புவதே.

# பாடசாலைகளை மூடும் அதிகாரம் மாகாணசபைகளிடமிருந்து பறிப்பு!

மாகாணசபைகளுக்குப் பாடசாலைகளை மூடுவதற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பறிமுதல் செய்ய முடிவுசெய்திருக்கின்றது.

முன்னைய அரசாங்கம், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளை மூடும் அதிகாரங்களை அந்தந்த மாகாணசபைகளுக்கே வழங்கியிருந்தது. இந்த அதிகாரத்தை வழங்கிய சுற்றுநிருபத்தையே தற்போதைய அரசாங்கம் ரத்துச் செய்துள்ளது.

பாடசாலைகளை மீளமைத்தல் என்ற நோக்குடன் வழங்கப்பட்ட இந்த அதிகாரங்களை மாகாணசபைகள் துஷ்பிரயோகம் செய்துவிட்டதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.

மாகாணசபைகள் இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, இது வரை 700 பாடசாலைகளை மூடியுள்ளன. எந்தவொரு பாடசாலையுமே அது குறித்த அனைத்து மதிப்பீடுகளும் செய்யப்படாமல் மூடப்படக்கூடாது என்றும்,

மாகாணசபைகளால் மூடப்பட்ட பாடசாலைகள் பற்றிய தகவல்கள் கல்வி ஆணைக்குழுத் தலைவர் வி.குணவர்த்தன சமர்ப்பித்த அறிக்கையிலிருந்து வெளிவந்ததாகவும் அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.

## தண்டவாளத்தினை விட்டு விலகிய திருகோணமலை பயணிகள் ரயில்

(திருமலை)

திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் சீனன்குடா ரயில் நிலையத்துக்கு அப்பாலுள்ள பாலையூற்றுப் பகுதியில் தண்டவாளத்தைவிட்டு விலகியது.

இதனால் பயணிகள் ரயிலின் சில பெட்டிகள் தனியாகப் பிரிந்து சென்றுவிட்டதாகவும் தெரியவருகின்றது. நேற்று முன்தினம் இரவு திருகோணமலை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட ரயிலே விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவத்தில் பயணிகள் எவரும் காயமடையவில்லை. எனவும் தெரியவருகின்றது.

## ஆய்வுப் பட்டறைக்கு திணைக்கள அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் குழு 'ஆய்வுப் பட்டறை ஒன்றுக்காகக் கொழும்பு செல்லவுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்வாய்வுப் பட்டறை எதிர்வரும் 31 ஆம் திகதியும் ஏப்ரல் முதலாம் திகதியும் நடைபெறும். திணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே தயாரித்து சமர்ப்பித்த அறிக்கைகள் தொடர்பாக இந்த ஆய்வுப் பட்டறையில் ஆராயப்படவுள்ளதுடன், இது சம்பந்தமான முடிவுகளையும் எடுக்கவுள்ளதாக தெரியவருகிறது.

# ஒடியல் மாவை வறுப்பதன் மூலம் அதிலுள்ள நச்சுத்தன்மை நீங்கும்!

## நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

ஒடியல் மாவிலுள்ள நச்சுத் தன்மை குறித்துப் பகுப்பாய்வு செய்வதற்கெனக் கொழும்பிலிருந்து வருகைதந்த நிபுணர்குழு தமது ஆய்வு தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

ஒடியல் மாவினை நீரில் ஊற வைத்து, வடித்து நச்சுத் தன்மை நீக்குகின்ற முறையே பெரும்பாலும் பொதுமக்களால் கடைப்பிடிக்கப் பட்டுவருகிறது.

இம்முறைமூலம் ஒடியல் மாவிலுள்ள முழு நஞ்சும் நீங்கிவிடப் போவதில்லை என்றும், இதனால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதாகவும் நிபுணர் குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒடியல் மாவினை வறுத்து துப்புரவு செய்கின்றபோது, நஞ்சுத்தன்மை முற்றுமுழுதாக நீங்கிவிடும் என்றும்- இம்முறையினால் எதுவித பக்கவிளைவுகளும் ஏற்படமாட்டாது எனவும் - நிபுணர்களின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க)

## யாழ் நகரப்பகுதியில்

# வாகன அதிகரிப்பினால் போக்குவரத்து நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் வாகனங்களின் தொகை அதிகரித்துள்ளதால் யாழ். நகரின் முக்கிய வீதிகளான கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி என்பனவற்றில் பெரும் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்பட்டுவருகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் தென்பகுதியிலிருந்து பெருமளவு வாகனங்கள் குடாநாட்டுக்கு வருவதனாலும், நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கையாலும் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், முக்கிய வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைத்திருப்பதனாலும் போக்குவரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டுவருகின்றன.

## சமஷ்டி அமைப்புமுறை குறித்து

# கனடிய அரசியலமைப்பு நிபுணர்கள் முஸ்லிம் எம்.பிக்களுக்கு விளக்கம்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த அழைப்பை ஏற்று, கனடிய சமஷ்டி நிபுணர்கள் இருவர் கொழும்பு வந்துள்ளனர்.

சமஷ்டி தொடர்பான விளக்கங்களை அளிப்பதற்காகவே இவர்களை முஸ்லிம் காங்கிரஸ் இலங்கைக்கு அழைத்துள்ளது. கனடாவின் முன்னாள் ஒன்ராரியோ மாகாண முதலமைச்சர் பொப்றே, பேராசிரியர் டேவிட் கமரோன் ஆகியோரே இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான 'தருஸ்லாமி'ல் நடந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்திற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமை தாங்கியிருந்தார்.

சமஷ்டி முறை தொடர்பாகவும், உலக நாடுகளின் நடைமுறையிலுள்ள சமஷ்டி அமைப்புக்கள் இலங்கைக்குப் பொருத்தமான சமஷ்டி முறை என்பன குறித்து இவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் , விளக்கமளித்தனர்.

சமஷ்டி நிபுணர்கள் மேலும் பல கருத்தரங்குகளில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸ் செய்துள்ளது.

## கலட்டியில் மிதிவெடி அகற்றப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடி அகற்றும் பணியில் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

யுத்த நடவடிக்கைகளின்போது பெருமளவிலான மிதிவெடிகள் இப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை மக்களின் பாதுகாப்புக்காக இப்பகுதியில் நடப்பட்டிருந்த 'மிதிவெடி கவனம்' எனும் அறிவிப்பு பலகை இனந்தெரியாத விஷமிகள் சிலரால் கழற்றிச் செல்லப்பட்டுள்ளது.

# சடலங்களை துண்டி மயானத்தில் தகனம் செய்வதில் இடர்பாடுகள்!

(யாழ்ப்பாணம்)

துண்டி மயானத்தில் இறந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதில் பொதுமக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர், ஈச்சமோட்டை, சுண்டுக்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் சடலங்களை எரிப்பதற்குத் துண்டி மயானம் மட்டுமே இருக்கிறது. இம்மயானத்திலே சடலங்களை எரிக்கச் செல்ல முன்னர் அப்பகுதி இராணுவ அதிகாரியின் அனுமதி பெறப்படவேண்டும். இரு மருங்கிலும் நெருக்கமான முட்கம்பி அடைக்கப்பட்ட பாதையூடாகவே சடலங்களைத் தூக்கிச் செல்லவேண்டியுள்ளது.

சடலம் எரியூட்டப்படும் பிரதேசத்தைச் சூழவிருந்த மதில்கள் படையினரால் அகற்றப்பட்டுள்ளன. இராணுவத்தினர் நீண்டகாலமாக இப்பகுதியைப் பயன்படுத்தி வருவதால், வெடிபொருள் அபாயமும் அதிகமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (சு)

## வாழ்க வளமுடன்





HAPPY BIRTHDAY

### முதலாவது அகவையில்

பெயர் : க.ஆருதி
முகவரி : மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்



### முதலாவது அகவையில்



பெயர் : சி.நிருஜா
முகவரி: சிவலிங்கம் மோட்டோர்ஸ், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

### ஆறாவது அகவையில்

பெயர் : தி.ஷர்மி
முகவரி: கட்டுடை, மானிப்பாய்.



### ஏழாவது அகவையில்



பெயர் : இ.வித்யா
முகவரி : தங்கோடை, காரைநகர்.

பெயர் : இ.விக்னா
முகவரி: தங்கோடை, காரைநகர்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி :------------------------------------------


பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்

# அழியும் மிருகங்களுக்கு பிரிட்டன் உதவி





அழிந்துவரும் மிருக இனங்களைப் பாதுகாப்பதற்காகப் பிரிட்டிஷ் அரசு முன்வந்துள்ளது. மத்திய ஆசியாவின் Saiga மானினம், கறுப்புக் காண்டாமிருகம், பெருவிலுள்ள Guanaco எனும் லாமா இனத்தைச் சேர்ந்த விலங்கு, கிழக்கு ஆபிரிக்காவின் flamingo எனும் கொக்கு இனம், கரிபியன் தீவுகளிலுள்ள ஆமைகள் என்பன பிரிட்டிஷ் அரசின் பாதுகாப்பு நிதியத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவ்விலங்கினங்கள் உள்ள நாடுகள் அநேகமானவை வறிய நாடுகள் என்பதால், இந்நாடுகளுக்கு விலங்குப் பாதுகாப்பிற்கெனப் பிரிட்டன் நிதியுதவி செய்யவுள்ளது.



# பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வதை கண்காணிக்க




பாடசாலைக்குச் செல்லும் தங்களது பிள்ளைகள் எங்குள்ளனர். பாதுகாப்பாக உள்ளனரா என்பதைப் பெற்றோர் கண்டறியப் பிரெஞ் தொலைத்தொடர்பு நிறுவனம் நடமாடும் கண்காணிப்புப் பொறிமுறையைக் கண்டுபிடித்துள்ளது. பாடசாலைக்குச் செல்லும் பிள்ளையின் வழித்தடத்தைக் கண்காணிக்கவென கார்டியன் ஏஞ்சல் எனும் நிறுவனம் கையில் எடுத்துச் செல்லும் சிறிய தொலைபேசியை அறிமுகம் செய்துள்ளது. தமது பிள்ளை எந்த வழித்தடத்தால் செல்கிறார் என்பதைப் பெற்றோர் இந்தத் தொலைபேசியின் வரைபடக் கருவியில் பார்வையிடலாம்.

செய்மதி மூலம் தடயம் கண்டறிவது போன்ற பொறிமுறையே இங்கும் உபயோகிக்கப்படுகிறது. வழியில் ஏதும் பிரச்சினை என்றாலும் இக்கருவி மூலம் பெற்றோரோ அல்லது இவர்களது பிள்ளைகளோ எச்சரிக்கைச் சமிக்ஞை எழுப்பலாம். இதன் கண்டிபிடிப்புச் சிறுபிள்ளைகளுக்கு உதவினாலும், இதை இளவயதினர் அநேகமாக வெறுக்கின்றனர். காரணம் எமக்கே தெரியுமே!




# ஒஸ்கார் விருது நிகழ்வு நடைபெறும்



ஈராக்கின் மீது போர் தொடுத்தபோதிலும், திரைப் படங்களுக்கான ஒஸ்கார் விருது வழங்கும் வைபவம் நடைபெற்றே தீரும் என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது. இம்முறை பாடல்களுடன் கூடிய இசைத் திரைப்படமான 'சிகாகோ' 75 ஆவது ஒஸ்கார் விருது வைபவத்தில் முதலிடம் பெறலாமென ஊகிக்கப்படுகிறது.

விருது வைபவம் நடைபெறும் கொடக் அரங்கைச் சுற்றித் தேசிய காவற் படையினர் காவற்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி 'ஒஸ்கார் விருது வழங்கும் விழா நேற்று ஆரம்பமானது.

# கொரில்லாவைத் தாக்கும் எபொலா



மத்திய ஆபிரிக்காவில் மனித இனத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் Ebola வைரஸ் அங்குள்ள மனிதக் குரங்குகளையும் அச்சுறுத்தி வருகின்றது. அத்துடன், கடந்த சில வருடங்களில் இவ் வைரஸினால் ஆயிரக்கணக்கான ஏனைய இனக் குரங்குகளும் இறந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு மாதங்களில் ஆறு கொரில்லா மனிதக் குரங்குகள் இறந்துள்ளன. கொங்கோ நாட்டிலேயே இந்த இறப்புகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இறந்த இக்குரங்குகளின் சடலங்கள் மூலமும், இவற்றின் இறைச்சியை' உண்பதன் மூலமும் இவ்வைரஸ் தாக்கம் மனிதர்களிடையே வேகமாகப் பரவுகிறது.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

## அங்கம் - 02

## கிரி ஃபித்



உலக சினிமாவில் இன்று பழக்கத்திலுள்ள பல்வேறு முறைகள், பெயர்கள் போன்றவற்றை வழங்கியவர் இயக்குநர் கிரி.:.பித்தான் என்றால் அது மிகையல்ல! நாம் தற்காலத்தில் ரசிக்கும் சினிமாவின் கூறுகள் அனைத்தும் கிரி.:.பித்தின் கடின உழைப்பிலும், சிந்தனையிலும் மலர்ந்தவையே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கிரி.:.பித்தின் இயக்கத்தில் படப்பிடிப்புக் கமரா வெறும் ஓர் இயந்திரமாகக் காட்சிப் பொருளைப் படம் பிடிக்காமல், பார்வையாளர்களின் கோணத்தில் கதையை நடத்திச் சென்றது. கிரி.:.பித் விரும்பியபடி கதைக்களத்துக்கு- காட்சிகளின் மையப்பகுதிக்குக் கமரா, பார்வையாளர்களை அழைத்துச் சென்றது. தன்னுடைய ஆரம்பகாலத்தில் கிரி.:.பித் ஒளிப்பதிவாளரிடம் இப்படிக் கூறினாராம். "கமரா கதாநாயகியின் முகத்தை நெருங்கட்டும்.... இன்னும் நெருக்கமாக... அதாவது திரை முழுவதும் கதாநாயகியின் முகம் தெரியட்டும்!" என்றாராம். தன்னால் அவ்வாறு படமாக்க முடியாது என்று கூறிய ஒளிப்பதிவாளர் கோபத்துடன் செட்டிலிருந்து வெளியேறிவிட்டார். பிறகு யோசித்துப் பார்த்து 'அப்படியே செய்வதில் நமக்கென்ன நஷ்டம்?' என்று திரும்பி வந்து கிரி.:.பித் கேட்டபடியே காட்சியைப் படமாக்கினாராம்!

கதையின் முக்கியமான பகுதியையோ, காட்சிக்குத் தேவையான பின்னணியையோ வெகுநுட்பமாகவும், விளக்கமாகவும் படமாக்க கிரி.:.பித் தயங்கியதே இல்லை. புதுமை மாறாத பூக்கள் வைத்துள்ள பூச்சாடி (flower vase) ஸ்டாண்டில் பொருத்தப்பட்டுள்ள தொப்பி, நம்பிக்கையற்ற தன்மையில் கையைப் பிசைதல் போன்றவற்றை குளோசப்பில் காட்டியுள்ள கிரி.:.பித்தின் அணுகுமுறையை மிகச் சிறந்த உதாரணங்களாகக் கூறலாம்.



'ஏ பேர்த் ஒவ் நேசன்' படத்திலிருந்து ஒரு காட்சி.

அதேபோல், கமராக் கோணங்களும் காட்சியை ஒட்டியே இவரால் நிர்ணயம் செய்யப்பட்டன. கலைஞர்களுக்கும், கமராவுக்கும் இடையேயுள்ள இடைவெளி காட்சியின் முக்கியத்துவத்தை ஒட்டியே அமைந்திருந்தன. குறிப்பிட்டுக் கூறுவதானால், அந்தக் காட்சியில் எந்தக் கதாபாத்திரம் முக்கியமோ, அந்தக் கதாபாத்திரத்தையே கமரா பின் தொடர்ந்தது.

கிரி.:.பித்துக்கு முந்தைய இயக்குநர்கள் மொத்தக் கூட்டத்தையும் அப்படியே வைத்துக்கொண்டு மொத்தப் படப்பிடிப்பையும் ஒருசேர நடத்துவதே வழக்கமாகக் கொண்டிருந்தனர். பார்வையாளர்கள் காட்சியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள இந்த முறை ஒருவிதத் தடை என்பதாகக் கிரி.:.பித் உணர்ந்தார்.



'ஏ பேர்த் ஒவ் நேசன்' படத்திலிருந்து ஒரு காட்சி.

உதாரணமாக, ஓர் அறையில் முப்பது பேர் இருக்கின்ற ஒரு காட்சியை எடுத்துக் கொள்வோம். மொத்தமாக அந்த அறையைக் காட்டும்போது, முப்பது பேரும் அவரவர் இடத்தில் அமர்ந்திருப்பார்கள் அல்லது நின்று கொண்டிருப்பார்கள். அந்தக் காட்சியில் இரண்டு பேர் மட்டும் பேசிக்கொள்வது முக்கியமான காட்சியாக இருந்தால், கமராவின் எல்லைக்குள் தேவைப்படாத மற்றக் கலைஞர்கள் ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு கூறி அப்புறப்படுத்தப்படுவர். இது கிரி.:.பித்தின் படங்களில் மட்டுமே இடம்பெற்றது!

(தொடரும்.....)

## திரை விமர்சனம்

# காதல் வைரஸ்



காதல் இல்லாமல், கவிதை இல்லாமல், க்ளோசப் ஷொட்களில் ரோஜாப்பூக்கள் காட்டாமல், தூதுபோகும் காதல் கடிதங்கள் வழிதவறிப் போவதாகக் காட்சியமைக்காமல், கதிரால் படம் எடுக்கவே முடியாது. காதல் வைரஸூம் அதே கதைதான்.

"சொன்னாலும் கேட்பதில்லை கன்னி மனது" என்ன ஒரு அபாரமான மெலடி! நிலாவினில் காதல் ஜோடிகள் மேகங்களிடையே தவழ்ந்து போவது தியேட்டரில் மட்டுமே காணக்கூடிய திருவிழாக் காட்சி. ஏ.ஆர்.ரஹ்மானின் புதுத்தரிசனத்தில் ரசிகர்கள் கிறங்கிப் போயிருக்கிறார்கள்.

காதலியின் நன்மைக்காக உயிர்விடும் எத்தனையோ கதாபாத்திரங்கள் தமிழ் சினிமாவில் பார்த்துப் பார்த்து நாம் சலித்தாகி விட்டது. அதிலும் இங்கே க்ளைமாக்ஸில் ரிச்சர்டின் காதலைக் காவியமாக்கி அழகு பார்ப்பதெல்லாம் எரிச்சலைத்தான் கிளப்புகிறது. படத்தின் இறுதி அரைமணி நேரம் தாளித்து விடுகிறது.

மிகப்பெரிய இயக்குநரான ரிச்சர்ட்டிடம், கதாநாயகன் வாய்ப்புக் கேட்க, அப்பாஸ் அவர் வீட்டிற்கு அழைத்து செல்கிறார். அங்கு ஏற்படும் அதிர்ச்சியில் ரிச்சர்ட், அப்பாஸுக்குச் சினிமாவில் யாரிடமும் வாய்ப்பு கிடைக்காதவாறு பார்த்துக்கொள்கிறார்.

இதைக்கண்டு பொங்கி எழுகிறார் அப்பாஸின் மனைவி ஸ்ரீதேவி. நான் அவருக்குக் கிடைக்கவில்லை என்ற பொறாமையில்தான் தன் கணவனைப் பழி வாங்குவதாகக் குமுறுகிறார். ஸ்ரீதேவி - திருமணத்திற்கு முன் ரிச்சர்டின் காதலி. இதைக் கேட்கும் ரிச்சர்ட், ஸ்ரீதேவிக்குத் தெரியாமலே அப்பாஸின் உயர்வுக்காக அரும்பாடுபடுகிறார். இறுதியில் தன் உண்மையான காதலை உணர்த்துகிறார்.

படத்தில் முதல் பாதியில் காதல் புன்னகை சிந்துகிறது. அந்தக் கண்ணாடித் துகள்கள் வழியே ஸ்ரீதேவி முகம் தெரிவதிலிருந்து - காதலும், இயற்கையும் பின்னிப் பிணைந்து கமரா வழியே அழகிய தரிசனம் தருகின்றன. ரகுவரனை அப்பாவாக, தாத்தாவாகப் பார்த்த காலம் போய், இதில் ஸ்ரீதேவியின் மாப்பிள்ளையாகத் திடீரென காட்சி தருகிறார். வேறுயாருமே கிடைக்கவில்லையா என்ன?

எதிர்பாராத சூழலில் காதல் பிளவுபட்டவுடன் ஸ்ரீதேவி கல்யாண அழைப்பிதழுடன் வந்து, உன்னை விடத் தகுதியானவனைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று கூறி ரிச்சர்டை கிளப்பி விடுவதும், அதன்பின் ஒரு சாதாரண வீட்டில் வசிக்க நேரும் ஸ்ரீதேவியின் கணவனான அப்பாஸ்- அவரிடமே சான்ஸ் கேட்பதும் பார்த்து பார்த்துச் சலித்துப்போன காட்சியமைப்பு. ஒரு பொறுப்பான ஹீரோவாக அறிமுகமாகியிருக்கிறார் ரிச்சர்ட். எந்த ஹீரோவிடமும் இல்லாத கண்ணியமான கதாபாத்திரம் (படத்தில் சண்டைக் காட்சிகளே கிடையாது). காதல் தேசம்போல இங்கேயும் கஷ்டப்படும் இந்த கதாநாயகனின் 'Bachular room' சென்னை அண்ணா சாலையையொட்டித்தான் அமைந்திருக்கிறது.

தெளிவான மேக்-அப்பும், முல்லைச் சிரிப்பும் ஸ்ரீதேவியைப் புத்தம் புதுப் பூவாய் மலரச் செய்திருக்கிறது. 'அவனின் காதல் கைகூடவில்லை என்பதால்தான் தன் கணவனின் கனவுகளை அழிக்க நினைக்கிறான்' என்று வெடிக்குமிடத்தில் நடிப்பும் தனது வருகையைப் பதிவு செய்கிறது.

அசோஷியேட் இயக்குநராய் வரும் விவேக், கொஞ்சமாகத்தான் சிரிப்பு மருந்து தடவுகிறார். ஒளிப்பதிவு - அர்ஜுன் ஜெயன் என்னும் புதுமுகம். குன்னூரின் அழகும், பாடல்களை திறமையாகப் பதிவுசெய்திருப்பதும் முதல் படத்திலேயே இவரிடம் இத்தனை திறமையா என்று ஆச்சரியப்பட வைக்கின்றன.

தன் சொந்த முயற்சியில் அப்பாஸை கதாநாயகனாக்கும் வரை படம் சீராகச் செல்கிறது. அதன்பின்? அதலபாதாளம்தான். (இதில் ஒரு சோகப்பாடல் வேறு)

ரிச்சர்ட் கத்தியால் குத்தப்படும் தியேட்டரிலுள்ள இருட்டின் நடுவே, கவிதை எழுதிக் கண் சாய்ப்பதெல்லாம் அதிகமான அலட்டல். ஆக இறுதி நிமிடங்களில் காணும் மிகைப்படுத்தப்பட்ட கற்பனை மிக்க சோகக் காட்சிகள்தான் படத்தையே ஒரு வழியாக்கிவிடுகின்றன.

- துஷி.

# ஜப்பான் வயோதிபர்களின் தற்கொலை மரணங்கள்



சராசரி வாழ்வுக்காலம் அதிகமாக உள்ள ஜப்பானில், முதியோர் விரக்தியால் தற்கொலை செய்யும் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. ஒரு வருடத்தில் மட்டும் 30 ஆயிரம் தற்கொலைகளைச் சந்தித்த ஜப்பானிய அரசு இது நாட்டுக்குப் பிடித்த ஒரு நோய் என்று கூறுகிறது.

பிறப்பு வீதம் குறைகிறது, இறப்பு வீதமும் குறைகிறது. இதனால், முதியோர் ஜப்பானில் பெருகிவிட்டனர். எமது குடும்பங்களுக்கு நாம் பாரமாக இருக்க விரும்பவில்லை எனச் சில முதியோர் கூறுகின்றனர். ஜப்பானில் படைவீரர்கள் தற்கொலை செய்துகொள்வது போர்க் காலங்களில் பெருமையாகக் கருதப்பட்டது. அது இன்று சிவில் சமூகத்திற்கும் தொற்றிவிட்டதுதான் கவலை தருவதாக உள்ளது.




# வாரம் ஒரு யோகாசனம்

## மயூராசனம்

கைவிரல்களைச் சேர்த்துக் கால்ப்பக்கம் நோக்கி விரல்கள் இருக்க, இரு முழங்கைகளின் மேல் தொப்புளின் இரு பக்கங்கள் பதிந்திருக்க, இரு கால்களையும் சேர்த்து நன்றாக நீட்டித் தலைக்குச் சமமாக நீண்டிருக்க நீட்டி, மெள்ளக் கழுத்தை நிமிர்த்தி, தலையைத் தூக்கி, முகத்தை நேராகப் பார்வை நிலைக்கும்படி வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாசனத்தை 10 தடவைகள் செய்தால் போதுமானது.

## மயூராசனத்தின் நன்மைகள்

இவ்வாசனத்தால் ஏறு குடல், இறங்கு குடல், சிறு குடல் என்பன சீராகச் செயற்படுகின்றன. மலச்சிக்கல் தணிந்து போகும். வாயுத் தொல்லைகள் நீங்குகின்றன. கைகள் வலிமை பெறும். மூல வியாதி, நீரிழிவு வியாதி போன்றன குணமடைகின்றன. நித்திரை இல்லாதவர்களுக்கு நித்திரையையும், நித்திரை கூடுதலாக உள்ளவர்களுக்குக் குறைக்கவும் உதவுகின்றது.



கற்றுத்தருபவர்
மா.மகாநேசன் (கரவெட்டி)

# குழந்தைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டிய பருவம்



குழந்தை நான்கு வயதை அடைந்து 12 வயதுக்கிடையில் பால்வேறுபாட்டைப் பற்றிய அறிவை, பெற்றோர் படிப்படியாகப் பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும். அப்படியானால், பாலறிவு பெற்றோருக்குத் தேவையானது. பால்வேறுபாடு பற்றிப் பெற்றோருக்குள்ள எண்ணம் மிகவும் கீழ்த்தரமானது. அதைப் பற்றிக் கதைக்கவே விருப்பமில்லை. பாலுறுப்புப் பற்றியும், பால் வேறுபாடுபற்றியும் பெற்றோருக்கு அறிவு இருப்பது மட்டுமல்ல, நல்ல எண்ணமும் இருப்பது முக்கியம். ஆகவே, பெற்றோர் பிள்ளைகளுக்கு இந்த அறிவை மட்டுமல்ல, இதைப்பற்றிய நல்ல எண்ணத்தையும் கொடுக்க வேண்டும். இந்த எண்ணத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் கொடுக்கலாம்.

இந்த வயதில் பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்வார்கள். முன்பைவிடச் சமுதாயத்தில் பலரைச் சந்திக்கின்றார்கள். முன்பைவிட வீட்டைவிட்டு வெளியே அதிக நேரம் தூரமாகி இருக்கப் பிள்ளையால் முடிகிறது. புற உலகில் காலடியெடுத்து வைக்கிறது. இதனால், சமவயதிலுள்ள குழுவில் சேரத்தொடங்கும். வீட்டுக்கு அயிலிலும் சமவயதினருடன் சேரத்தொடங்கும். அவர்களுடன் முன்பைவிட அதிக நேரத்தைக் கழிக்க விரும்பும். விளையாட ஆசைப்படும். ஆண்பிள்ளை வீட்டுக்கு வெளியே விளையாட்டுத் திடலில் விளையாட ஆசைப்படும்.

இக்காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகள் "சரியான குழப்படி" என்றும், "எந்நேரமும் விளையாட்டுத்தான்" என்றும் குறைகூறுவர். இது பிள்ளையின் இயற்கையான சுபாவமே. சமவயதான குழுவில் விளையாட, சேர ஆசைப்படுவது இயற்கையே. பெரியவராகியதும் உலகுடன் தொடர்புகொள்ளப் பழகுவது இக்குழுவிலேயேயாகும். இதைத் தடுத்தால் வளர்ந்த பிள்ளையானாலும் எதிர்காலத்தில் மற்றவர்களுடன் சேரப்பழகாது. தனிமையில் வாழவே விரும்பும்.

தமது பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடவிட்டால் கூடாத வார்த்தைகளைப் பேசப்பழகிவிடுவர் என்று இவர்களை விளையாட விடாது தடுத்துவிடுவர். விளையாடச் சென்று சண்டை பிடிப்பர். அதனால் இரு குடும்பங்களுக்கிடையிலும் பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்ற பயத்தில் பிள்ளைகளை மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடப் பெற்றோர் விடுவதில்லை.

இந்த வயதில் பிள்ளைகள் சுறுசுறுப்பாகவும், செயற்பாடுள்ள பிள்ளைகளாகவும் இருப்பர். இதனைப் பார்த்த பெற்றோர்கள் சரியான குழப்படி, சண்டியன் என்று கூறுவர். வேண்டாம் என்று சொன்னாலும் அதைக் கேட்காது பிள்ளை செய்வதாலேயே குழப்படி என்பர். இந்தச் சுபாவம் இந்த வயதில் இயற்கையானது என்பதைப் பெற்றோர் புரிவதில்லை.

ஆண்பிள்ளை விசேடமாக வீட்டுக்கு வெளியே விளையாட்டுத்திடலில் விளையாட ஆசைப்படும். பெண் பிள்ளைகளும் இவ்வாறு விரும்பக்கூடும். பெரியோரை மதிக்காது பேசுவது போன்று இந்த வயதுப் பிள்ளைகள் கதைக்கக் கூடும். சிலவேளைகளில் ஒழுக்கக் குறைவாகவும் நடக்கக் கூடும்.

துப்புரவாக இருக்க விரும்புவதில்லை. வியர்வையோட இருப்பர். எந்நேரமும் விளையாடவே ஆசைப்படுவர். இவை பிழையல்ல, இயற்கையானது. மேலும் பொறுப்புடன் செயற்பட மாட்டார்கள். ஏதாவது சொன்னால் அந்தநேரத்தில்தான் கடைப்பிடிப்பர். அதன்பின்பு மாறிவிடுவர். இதுவும் இயற்கையான சுபாவமே.

தமது குழுவில் சிலநேரம் நல்ல ஒற்றுமையாக இருப்பர். சிலநேரம் சண்டை பிடிப்பர். இதுவும் இயற்கையே. பிள்ளைகள் சண்டை பிடிப்பதைக் கண்டதும் பெற்றோர், பெரியவர்கள் இதில் தலையிடுவர். இதனாலேயே குடும்பங்களுக்கிடையில் பிரச்சினை வருவதால் பிள்ளைகளை விளையாட மற்றவர்களுடன் சேரவிடுவதில்லை. இதுவும் பிழையே. இரு பெற்றோருக்கும் இந்த அறிவு இருப்பின் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் சண்டையிடத் தேவையில்லை.

இந்த வயதிலுள்ள பிள்ளைகளுக்குப் புத்திமதி சொன்னால், அதைக் கருத்தில்கொள்வது குறைவாக இருக்கும். ஆனால், இதை அனுபவத்தில் பழகிக்கொள்ளும். அது மட்டுமல்ல இந்த வயதில் பிள்ளைகள் செய்யும் செயல்களில் ஆழமான தன்மை இருக்காது. அடிக்கடி மாறும் தன்மையிருக்கும். ஏதாவது வாங்கித் தருமாறு கேட்பர். பணம் கொடுத்து அதை வாங்கிக் கொடுத்தும் அதிக நாட்கள் அதைப் பயன்படுத்துவதில்லை. பூமரத்தை நாட்டுவர், மறுநாள் பிடுங்கி வேறிடத்தில் நாட்டுவர். ஒன்றிலும் ஆழமான் விதத்தில் செயற்பட மாட்டார்கள்.

அதேபோன்று தமது அவதானத்தை ஏதாவதொன்றில் செலுத்தும்போது கொஞ்சநேரமே செலுத்துவர். பெற்றோர் பிள்ளைகளிடம் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் படிக்கும்படி கூறுவர். அவர்களால் பத்து நிமிடத்துக்கு மேல் அவதானத்தைச் செலுத்த முடிவதில்லை. அடிக்கடி மாறுபவற்றிலே அவதானத்தைச் செலுத்துவர். சிலவற்றில் நல்ல உற்சாகமெடுப்பர். அதுவும் கொஞ்ச நேரமே இருக்கும். இன்று தொடங்கும் விளையாட்டை நாளை கைவிட்டு விடுவர்.

மேலும் பல பொருட்களைச் சேர்க்கத் தொடங்குவர். முத்திரை, வெண்கட்டி, சோடாமூடி, ஸ்ரிக்கேஸ், பேப்பர் என்ற பல பொருட்களைச் சேர்ப்பர். கிராமப்புறங்களிலுள்ள பிள்ளைகள் குருவிகளைப் பிடித்துத் தமது காற்சட்டைப் பையில் வைத்திருப்பர். பெண்பிள்ளைகள் பெரும்பாலும் வீட்டில் விளையாடுவர். பாடசாலையில் நிகழும் வேதனையான சம்பவங்களில் மனஞ்சோர்ந்து அதற்கான பாதுகாப்புணர்வை வீட்டிலே தேடுவர். பிள்ளை பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போது ஆகக்குறைந்தது தாயாவது வீட்டிலிருப்பது நன்று. வந்ததும் தனது வேதனைகளைச் சொல்ல நினைப்பர். அதற்கான சூழலைப் பெற்றோர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (தொடரும்)

- எஸ்.ஜே. யோகராஜா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பின்பலன் பற்றார்க்கு இனிது.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## மிதப்பைத் தகர்க்கும் திருப்பம்!

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் ஆரம்பித்த ஈராக் மீதான தாக்குதல் - அமெரிக்கா எதிர்பார்த்தது போலல்லாது - எதிர்பாராத திருப்பங்களுடன், பின்னடைவுகளுடன் நகர்ந்து செல்கின்றது.

தாக்குதல் ஆரம்பிக்க முன்னரும், ஆரம்பித்த வேகத்திலும் - போரின் போக்கு மீதும், தனது படை- ஆயுத பலங்களின் மீதும் - மிகுந்த நம்பிக்கை கொண்டு வீராவேச அறிக்கைகளை விட்டுவந்த அமெரிக்கா - நேற்று முன்தினம் 'பிச்சை வேண்டாம், நாயைப்பிடி' என்ற கணக்காக அறிக்கைவிடவேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

மிகக் கடுமையான விமானத் தாக்குதல்களையும், இடைவிடாத ஏவுகணை வீச்சுக்களையும் - அறிமுகமாக ஆரம்பித்த அமெரிக்கா- இராணுவ ஆய்வாளர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக - மிகத் துரிதமாகவே தனது தரைவழி நகர்வையும் தொடங்கியது.

இந்தத் தந்திரோபாயத்தின் பின்னணி - அமெரிக்கா தன் படைகள் மீதும், நவீன செறிவான ஆயுதங்கள் மீதும் கொண்ட நம்பிக்கை என்பது ஒரு புறமிருக்க - ஈராக்கியப் படைகளைக் குறைத்து மதிப்பிட்டதும் - அந்நாட்டின் புவியியற் பரப்பை - ஏதோ ஈராக்கியப் படைகளைவிட, தானே அதிகமாகத் தெரிந்துவைத்திருப்பதுமான மிதப்பும் மறுபுறமாகியிருந்தன.

எல்லை கடந்த அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுக்கு தரைவழித் தாக்குதல் தொடங்கிய முதலிரு நாட்களில் கிடைத்திராத எதிர்ப்பு - தமது தந்திரோபாயம் வெற்றி பெற்றுவிட்டதென்றே அவர்களை நினைக்கத் தூண்டியது.

ஈராக்கின் ஒரேயொரு ஆழ்கடல் துறைமுகமான உம் காசிர் ஐக் கைப்பற்றி விட்டதாகவும், இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவைப் பிடித்து விட்டதாகவும் - வெற்றிப் பிரசாரமும் செய்யப்பட்டது. இது - இனி பக்தாத்தே இலக்கு எனவும் மார்தட்ட வைத்தது.

ஆனால் - இதற்குப் பிறகுதான் போர்க்களம் திரும்ப ஆரம்பித்தது. வேகமாக முன்னேறிய நேசநாட்டுப் படைகள் பொறிக்குள் சிக்கியவர்களாக - ஈராக்கின் தாக்குதல் அதன்பின்பே தீவிரமானது.

உம் காசிரிலும், பஸ்ராவிலும் மறைந்திருந்த ஈராக்கியப் படைகள் - திடீர் தாக்குதல்களைத் தொடுக்கவும், நேசநாட்டுப் படைகளின் விநியோகப் பாதைகள் குறிவைத்துத் தாக்கப்படவும் - பின்னடைவை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளவேண்டிய நிலை வந்திருக்கிறது.

அதிலும் - அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதும், போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டதும் - அமெரிக்காவின் ஆர்ப்பரிப்பை, வெற்றி வழியை வலுவாகவே பாதித்துவிட்டது.

குறிப்பாக - போர்க் கைதிகளை ஈராக்கியத் தொலைக்காட்சி நேர்கண்டதும் - பின் அதனை அல்-ஜசிரா தொலைக்காட்சி உலகம் முழுவதும் எடுத்துச் சென்றதும் - அமெரிக்காவை மிகவும் சங்கடத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் ஃபீல்ட் - போர்க்கைதிகளின் பேட்டிகளை ஒளிபரப்புவது ஐ.நா. சாசனத்திற்கு முரணானது என தெரிவித்தது வேடிக்கையாகவும், சுவாரஸ்யமாகவும் இருந்தது.

ஐ.நாவின் கோரிக்கைகளை மீறி, அதன் அனுமதியின்றி, ஐ.நா. என்றொரு உலக அமைப்பையே - தனது அலட்சியத்தால் உதறித்தள்ளிவிட்டு போரை ஆரம்பித்த அமெரிக்கா - தனது படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டதும் - ஐ.நா.சாசனங்கள் பற்றிப் பேசுவது விந்தையானதல்லவா...?

அமெரிக்கா - இனிச் சந்திக்கப் போகும் நெருக்கடிகளுக்கும், உலக அபிப்பிராயத்திற்கும் - கட்டியம் கூறுவது போல - ரம்ஸ் ஃபீல்ட்டின் கருத்துக்கள் அமைந்தன.

அதேவேளை - போர்க் கைதிகளை நடாத்தும் முறை பற்றிப் பேசும் அமெரிக்கா - ஈராக்கிற்குள் நுழைந்த பின்னர், கொன்ற அந்நாட்டுப் படையினரின் தலைகளை வெட்டியெடுத்து எறிந்த செய்திகள் புகைப்பட ஆதாரங்களாகவே வெளிவந்த நிலையில்-

போர் நெறிமுறை, மனிதாபிமானம் பற்றிப் பேசும் தார்மீக உரிமையை அமெரிக்கா தொலைத்து வருகின்றது என்றே கொள்ளலாம்.

இது மட்டுமல்லாது - இனிவரும் போரின் போக்கும் - அமெரிக்காவுக்கு 'அள்ளிக் கொடுத்து விடுவதாக' அமைந்துவிடாது என்பதோடு - போரில் ஈடுபட்டுள்ள படையினரின் தற்துணிவையும், ஊக்கத்தையும் பாதிப்பதான நிகழ்வுகளுக்கும் இனி அநேகம் இடமிருக்கும் என்றே கருதமுடிகின்றது.

ஏனெனில் - அமெரிக்கா நகரவுள்ள இனிவரும் பகுதிகள் - ஈராக்கின் வலிமையான பாதுகாப்புக்குட்பட்ட பகுதிகள் என்பதோடு - அவற்றிலிருந்து கிடைக்கவல்ல எதிர்ப்பும் சாமான்யமாக இராது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒட்டுமொத்தத்தில் - ஈராக்கை அமெரிக்கா தனது முழுப்பலத்தையும் பயன்படுத்திக் கைப்பற்றிக் கொண்டாலும் - 'ஈராக்கிய அனுபவம்' அமெரிக்காவுக்கு மறக்க முடியாத புதியதொரு பாடத்தை, இன்னுமொரு வியட்நாமிய நினைவுகளைத் தரத் தொடங்கிவிட்டது என்றே கூறலாம்.

# போகிற போக்கில்....

இப்போதெல்லாம் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் இடம்பிடிக்கின்றன. இடமாற்றத்தில் பல இடங்களில் அநீதி நடைபெறுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இன்னும் சில இடங்களில் அரசியல் பழிவாங்கல்கள் நடைபெற்றுள்ளன. வேறு சில இடங்களில் இடமாற்றங்கள், எதிர்ப்புக்கள் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தற்போது மேல் மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. மார்ச் 15 ஆம் திகதி மேல்மாகாண ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். நீண்ட கால இழுபறிகளுக்கு மத்தியில் இந்த இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. மேல்மாகாணம் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்டுப்பாட்டிலுள்ளது. மேல்மாகாணசபை அவர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அவர்கள் தங்கள் விருப்பம்போல இடமாற்றத்தை மேற்கொண்டுள்ளார்கள். மேல்மாகாணத்தின் முதலமைச்சரும், கல்வி அமைச்சருமான ரெஜினோல்ட் குரேயின் உத்தரவின் பேரிலேயே இந்த இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

மேல்மாகாணத்தில் சிங்கள ஆசிரியர்களின் தொகை மேலதிகமாக உள்ளது. ஆனால், தமிழ் ஆசிரியர்களின் தொகை அப்படியல்ல. பல பாடசாலைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது. இப்படியிருக்க - எந்தவிதமான திட்டமுமின்றிச் சிங்கள ஆசிரியர்களையும், தமிழ் ஆசிரியர்களையும் ஒரே இடத்தில் மாற்றுவதை மேற்கொண்டுள்ளார்கள். இதனால், பல தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை மேலும் அதிகரித்துள்ளது. முக்கியமான பாடங்களைக் கற்பிக்கப் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லாமல் அதிபர்கள் தடுமாறுகின்ற நிலையும் மேல்மாகாணத்தில் எழுந்துள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால், தமிழ் ஆசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளுக்குக்கூட மாற்றப்பட்டுள்ளார்கள். மேல்மாகாணத்தில் தமிழ் ஆசிரியர்கள் நடத்தப்படும் முறைக்கு இச்சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டாகும்.

வடக்கு- கிழக்கில் பத்தாயிரம் தமிழ்மொழி மூல ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால், இலங்கையில் பதினையாயிரம் சிங்களமொழி மூல ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் மேல் மாகாண தமிழாசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளுக்கு மாற்றப்படுகின்றனர். அதுமட்டுமல்ல முஸ்லிம் பாடசாலைகளுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

மேல்மாகாண இடமாற்றச் சபையில் - தமிழ் ஆசிரியர்களுக்கு ஆதரவாகக் கதைப்பதற்கு எவரும் இல்லையாம். சிங்கள அதிகாரிகளும், முஸ்லிம் அதிகாரிகளும் சேர்ந்து இந்த இடமாற்றத்தைச் செய்துள்ளனராம். மேல் மாகாணத்தில் தமிழ் அதிகாரிகள் சிலர் உள்ளனரே என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். அவர்களை எவருமே அதிகாரிகளாகக் கணக்கெடுப்பதில்லையாம். அது மட்டுமல்ல - இருக்கும் ஒருசில தமிழ் அதிகாரிகளுக்குத் துணிவும் இல்லையாம். தம் பதவிகளைக் காபபாற்றிக் கொள்வதிலும், பணத்தைச் சம்பாதிப்பதிலுமே குறியாக உள்ளார்களாம்.

மேல்மாகாண இடமாற்றச் சபையில் தமிழ்ப் பாடசாலைகளினது நிதிகளோ அல்லது தமிழ் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளோ இருக்கவில்லையாம். முஸ்லிம் அதிகாரிகளும் ஏனைய தொழிற்சங்கப் பிரதிநிதிகளுமே இருந்துள்ளார்களாம்.

மேல் மாகாணப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு-கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டுதற்குரியது.

மேல்மாகாணத்திலுள்ள முஸ்லிம் ஆசிரியர்கள், முஸ்லிம் பாடசாலைகளுக்கே மாற்றப்பட்டுள்ளார்களாம். ஆனால், தமிழ் ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இது கலாசார ரீதியாகத் தமிழ் ஆசிரியர்களுக்கு மனப் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாம்.

தமிழ் ஆசிரியர்களுக்காகத் தமிழர் ஆசிரியர் சங்கம் மட்டுமே குரல்கொடுத்து வருகிறது. மேல்மாகாணத்தில் தமிழ் அரசியல்வாதிகள் இருந்தும் எவருமே தமிழ் ஆசிரியர்களுக்காகக் குரல்கொடுக்கவில்லை.

இடமாற்றம் நிகழ்ந்து ஒருவாரத்தின் பின், மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் இடமாற்றங்களை உடனடியாக நிறுத்துமாறு மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் மேல்மாகாண முதலமைச்சருக்குக் கடிதமொன்றை எழுதியுள்ளார். வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுத்ததாகச் செய்திகளில்லை.

முஸ்லிம் பாடசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் ஒருவர் தனது இடமாற்றம் பற்றி இவ்வாறு கூறினார். பத்து வருடங்களுக்கு மேலாகக் கற்பித்து வரும் ஆசிரியர்களை இடமாற்றுவது என்ற திட்டத்திற்கு அமைய இடமாற்றம் நிகழ்ந்துள்ளது. இடமாற்றம் செய்யும்போது எமது விருப்பம் என்னவென்று கேட்கப்படவில்லை. அவ்வாறு கேட்காவிட்டாலும் பரவாயில்லை. என்னைத் தமிழ்ப் பாடசாலை ஒன்றுக்கு மாற்றியிருக்கலாம், அதுவுமில்லை. முஸ்லிம் ஆசிரியர்களை மட்டும் தாம் விரும்பும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாற்றம் செய்து கொடுத்துள்ளார்கள். எங்களுக்கு அவ்வாறு செய்யவில்லை. அவர்களது கலாசாரத்தைக் கணக்கெடுத்து முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாற்றியவர்கள் - எங்களது கலாசாரத்தையும் மதித்து எங்களையும் தமிழ் பாடசாலைகளுக்கு மாற்றியிருக்கலாமே. இல்லாவிட்டால், எங்களது சொந்த ஊருக்கு மாற்றத்தைத் தந்திருக்கலாமே என்று கண்ணீர்மல்கக் கூறினார்.

மேல்மாகாணத்தில் கடமைபுரியும் முக்கியமான பதவியிலிருப்பவர் எனக்கு இன்னொரு செய்தியையும் சொன்னார். மேல்மாகாண முஸ்லிம் பாடசாலைகளின் கல்விநிலை மிகவும் மோசமாக இருப்பதால், முஸ்லிம் அதிகாரிகள் - தமிழ் ஆசிரியர்களை முஸ்லிம் பாடசாலைகளுக்கு மாற்றியுள்ளார்களாம் என்று சொன்னார்.

மார்ச் மாதம் 15 ஆம் திகதி மேல்மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பாடசாலை முதலாந்தவணை விடுமுறைவிட இன்னும் சில வாரங்களே உள்ளன. இந்த நிலையில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதால் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படாதா? இதுபற்றி எவருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பாடசாலை மட்டக் கணிப்பீட்டை எவ்வாறு தொடர்ந்து நகர்த்திச் செல்வது என்று தெரியாமல் பல அதிபர்கள் தடுமாறுகின்றார்கள். மேல்மாகாணத்திலுள்ள தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி நிலையைப் பற்றித் தமிழ் ஆசிரியர் சங்கத்தைத் தவிர எவருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

கொழும்பில் பல மன்றங்கள், சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் அங்கத்தவர்களாக உள்ளவர்கள் பத்திரிகைக்கு அறிக்கைவிடுவதிலும், தொலைக்காட்சித் திரையில் தோன்றித் தம்புகழை உயர்த்துவதிலும் அக்கறை உடையவர்களாக இருக்கின்றனர். தமிழர்களின் கல்விநிலை பற்றிச் சிந்திக்கவேண்டிய தருணம் இது. புத்திஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்வோரும், தொலைக்காட்சியில் தோன்றி தமிழர்களின் கல்வி பற்றிக் கதைக்கின்றார்கள். ஆனால், நடைமுறையில் சுயநலப்பிரியர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். இது இப்படியிருக்க மத்திய மாகாணத் தமிழ்ப் பாடசாலைகளில் நிலவும் விஞ்ஞானப்பாடப் பட்டதாரி ஆசிரியர்களின் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக இந்தியாவிலிருந்து ஆசிரியர்களை வரவழைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. இதேவேளை, வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கக் கல்வியமைச்சு இன்னும் அனுமதி வழங்கவில்லை. இலங்கையில் நடைபெறும் நிகழ்வைப் பற்றிச் சிந்திக்கும்போது தலை சுற்றுகிறதா?

கொழும்பிலிருந்து- உதரன்

# போர்ப் பாதிப்புக்களை ஆவணப்படுத்த சர்வதேச புகைப்பட நிபுணர் வருகிறார்

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புகைப்படங்களில் பதிவுசெய்வதற்குச் சர்வதேசப் புகழ்பெற்ற புகைப்பட நிபுணர் ஒருவர் வரவுள்ளார்.

ரிம் டிக்கின்சன் என்ற புகைப்பட நிபுணரே நோர்வே நாட்டின் உதவியுடன் வட - கிழக்குப் போர் பாதிப்புக்களைப் புகைப்பட ஆவணங்களாக்கவுள்ளார்.

இவர், ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை வந்து, இங்குள்ள நிலைமையைப் பார்வையிட்டிருந்தார். கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உள்ளிட்ட போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் இவர் அவதானித்திருந்தார்.

முன்னர் இவர் பர்மாவில் கரேன் மக்களோடு இணைந்திருந்து அங்குள்ள நிலைமைகளைப் புகைப்பட ஆவணங்களாக்கியிருந்தார். 1994, 1995 ஆம் ஆண்டுகளில் கரேன மக்களுடன் வாழ்ந்தே இவர் தனது புகைப்படங்களை ஆவணப்படுத்தியிருந்தார்.

கரேன் போராளிகளுடன் ஒப்பிடுகையில் புலிகள் மிகுந்த கட்டுப்பாட்டுடனும், நவீன உபகரண வசதிகளையும் கொண்டிருப்பதாகப் புகைப்பட நிபுணர் ரிம் டிக்கின்சன் தெரிவித்தார்.

இவர் இலங்கை வந்து போர்ப் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் குறிப்பிட்ட காலத்துக்குத் தங்கியிருந்தே புகைப்படங்களை எடுக்கவுள்ளார். இந்தப் புகைப்படங்களை லண்டனில் கண்காட்சிக்கு வைக்கவும் இவர் திட்டமிட்டுள்ளார்.

## தனக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு இராணுவத்தினருக்கு ஹொவ்டே நன்றி!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே, தனது சேவைக் காலத்தில், புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்கியமைக்கு இலங்கை இராணுவத்தினருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு ஹொவ்டே அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே - அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவம் - வன்முறைகள், நெருக்கடிகள் மிகுந்த வேளையிலும் அதற்கு உடன்படாமல், புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு விசுவாசமாக செயற்பட்டதாக ஹொவ்டே அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவப் புலனாய்வாளர் கொலை தொடரும் சி.ஐ.டி விசாரணைகள்

கல்கிசையில் இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ரகுபதி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதாகவில்லை என்று பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்தார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ரகுபதியின் கொலை தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இதேவேளை உயிரிழந்தவர் தன்னுடன் தொடர்புடைய உயர் இராணுவ அதிகாரிக்கு, கொழும்பிற்குள் இருவர் ஊடுருவியுள்ளதாகவும், அவர்களில் ஒருவர் தன்னைக் கொல்ல இலக்கு வைத்திருப்பதாகவும் முன்னரே தெரிவித்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

# அதிகாரங்களை நிர்வாக சுயாட்சியாக பகிர்ந்தளித்த சீனாவின் மத்திய குழு!



சீனச் சிற்பி மாசேதுங்

இக்கட்டுரைத் தொடரில் - அதிகாரப் பகிர்வு முறையின் மாதிரிகள் என்ற வகையில் கனடா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா ஸ்பெயின் ஆகிய நாடுகளின் அதிகாரப் பகிர்வு முறைகளைப் பார்த்திருந்தோம். இன்றைய அதிகாரத்திலிருந்து சீனாவினது அதிகாரப் பகிர்வு முறையினைப் பார்க்கலாம்.

சீனாவின் அதிகாரப்பகிர்வு முறை என்றதும் வாசகர்கள் பலருக்குச் சீனக் கம்யூனிஸ் கட்சியின் மத்திய திட்டமிடல் குழு மேற்கொள்ளும். 'ஒரு கட்சி முறைமையிலான'

## சுயநிர்ணயம் ஒரு பார்வை பகுதி - 26

ஆட்சி முறையில் அதிகாரப் பகிர்வு இருக்கின்றதா என ஐயம் எழலாம்.

ஆனால், சீனாவில் அதிகாரப் பரவலாக்கம், அந்நாட்டுக்குரிய கலாசாரத்தின் அடிப்படையிலும், கம்யூனிஸத் தத்துவத்தின் அடிப்படையிலும் இணைந்த விதத்தில் காணப்படுகின்றது. இதனைவிட, 1997 ஆம் ஆண்டிற்குப் பின்- முற்றிலும் பிரதான பொருளாதாரத்தினைக் கொண்டமைந்த ஹொங் கொங்கிற்கு அதற்குரிய சுயநிர்ணயத்தினை அளித்து காலனித்துவ .காலத்தில் பிரிந்



உயர உயர... இன்னும் உயர.

திருந்த அந்நாட்டினைத் தன்னுடன் அது இணைத்தும் வைத்துள்ளது.

இவ்வாறு இணைத்து வைத்திருப்பதன் மூலம், இன்று உலகில் எங்கும் நடைமுறையில் இல்லாத வகையில் - 'ஒரு நாடு - இரண்டு முறைமைகள்' **(One Country - Two Systems)** என்ற அடிப்படையில் இரண்டு பொருளாதாரங்களைக் கொண்டிருக்கிறது.

அதாவது, மத்திய திட்டமிடல் முறையிலான சோசலிஸப் பொருளாதாரத்தினையும் சந்தைச் சக்திகளால் தீர்மானிக்கப்படுகின்ற முதலாளித்துவப் பொருளாதாரத்தினையும் கொண்டமைந்த நாடாக சீனா - 1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் விளங்குகின்றது.

இரட்டைப் பொருளாதார அமைப்பினைக் கொண்டமைந்த சீனாவின் அதிகாரப் பகிர்வு முறைமையினைப் பற்றிய விசேட ஆராய்ச்சியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியற் பேராசிரியர், கலாநிதி அ.வே.மணிவாசகர் மிகவும் ஆழமாகச் செய்துள்ளார். அவரது கருத்துக்களும் இக்கட்டுரைத் தொடரின் பிறிதொரு பாகத்தில் வாசகர்களுடன் பகிரப்படும்.

ஆனால், இன்றைய கட்டுரைப் பகுதியில் சீனா, தனது நாட்டிலிருக்கும் சிறுபான்மையினருக்கு, எவ்வாறான அதிகாரப் பரவலாக்கலை மத்திய திட்டமிடல் குழுவினருக்கூடாக மேற்கொண்டது என்பதனை ஆராய்வோம்.

சீனாவின் அரசியல் வரலாற்றினையும் அதனது பொருளாதார முறைமையினையும் நோக்கின் - உலகின் சமகால அரசியல் உறவுகளோடும் அதன் நெருக்கடிகளோடும் எதிர்நீச்சல் போட்டு, நின்று நிலைத்து நிற்கிறது. இதற்குப் பிரதான காரணம், தொடர்ச்சியாகச் சீன மத்திய திட்டமிடல் குழு- எதிர்காலத்தில் எவ்வாறு உலகின் போக்கும், சர்வதேச உறவுகளும் இருக்கும் என்பதனை முன்கூட்டியே தூரநோக்குடன் தீர்மானித்து- தமது கொள்கை வகுப்புக்களைத் திறம்படச் செய்துவருவதே என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.




சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம்

"ஒன்றுபட்ட பல தேசங்களது மக்களாகிய எமக்கு- சமத்துவம், ஒற்றுமை, பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் உருவாக்கும் சீன அரசியல் திட்டமானது, ஒன்றுபட்ட பல தேச மக்களது சுதந்திரத்தினையும், பாதுகாப்பினையும் உறுதிசெய்வதோடு, ஹன் பேரினவாதத்திற்கு **(Han Chauvinism)** எதிராகவும் போராடுவதற்கு ஊக்கமளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது."

- என, சீனாவினது அரசியற்திட்டத்தின் முகவுரையிலே **(Preamble)** குறிப்பிடப்படுள்ளதனை நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டும். இங்கே- சீனதேசமானது அல்லது சீனக்குடியரசானது பல தேசங்களது ஒன்றுபட்ட தன்மையால் உருவாக்கப்பட்டது, சீனாவிற்குப் பல தேசியங்கள் இருக்கிறது என்பதனையும் உட்கிடையான முறையில் மறைமுகமாகத் தெரிவிக்கின்றது என்பதனையும் குறிப்பிடவேண்டும்.

பொதுவாக- மேற்குலகின் வரையறைகளிலிருந்து, தாராண்மை வாதத்தின் ஒரு பக்க விளைவாக அல்லது உப உற்பத்தியாகத் தான் அதிகாரப் பகிர்வுகளை **(Devolutional Power)** நாம் நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், ஒற்றையாட்சியின் கீழும் மத்திய திட்டமிடலின் கீழும் அதிகாரப் பகிர்வினை மேற்கொள்ளலாம் என்பதற்குச் சீனா இன்றைய உலகின் முன்னுதாரணம் என்பதனை அரசறிவியற் கற்கையாளர்கள் வெளிக்கொணராமை, அரசறிவியல் எதிர்கொண்ட துரதிர்ஷ்டமே எனக் கூறலாம்.

இந்த வகையில் சீனக்குடியரசின் அரசியற்திட்டம் ஒரு செயற்திட்ட அறிக்கையாக இருந்துகொண்டிருக்கும்போது - அதற்கு இணைந்த வகையில் அந்நாட்டின் செயற்பாட்டுத் தத்துவங்களாக மார்க்சிய கோட்பாடுகளும் மாவோ சேதுங்கின் சிந்தனைகளும் காணப்படுகின்றன.

சீனக்குடியரசின் சமூக தளத்தினை நோக்கும்போது - விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளின் அடிப்படையிலே ஐம்பத்தைந்து இனக்குழுமங்கள் காணப்படுகின்றன. இந்த 55 இனக்குழுமங்களில் ஹன் **(Han)** இனமே பாரிய பெரும்பான்மை இனமாகக் காணப்படுகின்றது.

ஏனைய 54 இனக்குழுமங்களும் சிறுபான்மையினராகக் கருதப்படுகின்றனர்.

(இங்கு மிக முக்கியமான விடயமாக - கம்பியூனிஸத் தத்துவத்தின் அடிப்படையில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடோ அல்லது கோட்பாடோ கிடையாது. அங்கு தொழிலாளர் - முதலாளிகள் என்ற பாகுபாடுதான் காணப்படும். ஆனால், சீனாவின் சமூகக் கட்டமைப்பினை எடுத்துக் கூறுவதற்காகவே இக்கட்டுரையில் சிறுபான்மையினர் எனக் கையாளப்பட்டுள்ளது)

சீனக்குடியரசினைப் பொறுத்தவரையில் மாவோ நடாத்திய கலாசாரப் புரட்சியின் போது இனத்துவ அடையாளங்களிலும் பார்க்க, முதலாளி-தொழிலாளி என்ற வர்க்க அடையாளமே முதன்மைப்படுத்தப்பட்டு இனத்துவ அடையாளமும் இனத்துவ சிந்தனையும் மீள் கட்டமைப்பிற்குள்ளாக்கப் பட்டுவிட்டன.

இந்த அடிப்படையில் சீனாவில் அரசாட்சியினைச் செலுத்தும் மத்திய திட்டமிடல் குழு "ஆட்சி அதிகாரத்தினை" தன்வசம் வைத்திருந்தபோதும்- நிர்வாக ரீதியான அதிகாரப் பரவலாக்கத்தினை ஏலவே செய்துள்ளது.

அதாவது, சீனாவின் முடியாட்சிக் காலத்தில் தனித்துவமான அரசுகளைக் கொண்டமைந்த பிரதேசங்களிற்கும் தேசிய அந்தஸ்தினைக் கொண்டமைந்த இனங்கள் வாழும் பிரதேசங்களிலும் "பிரதேச ரீதியான அதிகாரப் பகிர்வு" **(devolutional power on the basics of Region Divercity)** முறையினை நிர்வாக ரீதியாக சீனக்குடியரசு மேற்கொண்டு வருகின்றது.

இந்தப் பின்புலத்தின் அடிப்படையிலேயே கடந்த வருடம் சீனக்குடியரசு- பிராந்திய ரீதியாக சந்தைச் சக்திகளை உருவாக்கி, தன்னை சர்வதேச ரீதியில் பொருளாதார வல்லரசாக உருவாக்கும் நோக்குடன், தனக்கு வேண்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்களை அதாவது முதலாளித்துவச் சந்தை முறைமைகளை சிறிதளவில் அறிமுகம் செய்ய ஆரம்பித்துள்ளது.

சீனக் குடியரசு "நிர்வாக ரீதியான சுயாட்சி"யினை **(Administrative Autonomy)** தனது பிரதேசங்களில் நடைமுறைப் படுத்துவதற்கு- சீனப் பிரதேசம் பரந்துபட்ட பெரிய பிரதேசம் என்பதனாலும், பல்லின மக்களையும் குறிப்பாக - இஸ்லாமிய, பெளத்த மதங்களைப் பின்பற்றும் மக்களைக் கொண்டமைந்ததும் காரணங்களாகும்.

இன்றைய சீனா - புதிய உலக ஒழுங்



புதிய தலைமையில்

கிற்கு அச்சுறுத்தலாகத் தன்னை வியாபித்துவிடும் என்ற அச்சத்தால், சீனாவிற்கு, எதிரான சர்வதேச் நாடுகள்- சீனாவினது சிறுபான்மையினரைத் தமக்குச் சாதகமான ஒரு கருவியாகக் கையாண்டு- தன்னைக் குழப்ப முயல்வதாக சீனா தற்பொழுது கருதிவருகின்றது.

இதனால் சீனாவினது அதிகாரப் பகிர்வு முறைமையானது சில நெருக்கடிகளையும் சில மட்டுப்பாடுகளையும் தற்பொழுது எதிர்நோக்கி வருகின்றது. இதனால் சீனாவின் பிராந்தியங்களில் பலவீனமான நீதித்துறையும் தெளிவான அதிகாரப் பகிர்விற்கான உத்தரவாதங்கள் இல்லாத தன்மையும் அண்மைக் காலத்தில் காணப்படுகின்றன.

**வேலும்மயிலும் சேந்தன்**

'பலவீனமான நீதித்துறை' என்ற அடிப்படையில், பிராந்திய நிர்வாக அலகுகளிலும் பார்க்க மத்திய குழுவிடமே- கூடுதலான நீதி நெறிமுறைகளைக் கையாள்வது, தண்டனைகளைத் தீர்மானிப்பது, குற்றத்திற்காக மன்னிப்பளிப்பது போன்ற விடயங்கள் காணப்படுகின்றன.

அதிகாரப் பகிர்விற்கான தெளிவில்லாத உத்தரவாதங்கள்- சீனாவின் சர்வதேச கொள்



மாறாத பழமை

கையிலும் அதன் நடவடிக்கைகளிலுமே தங்கியுள்ளன. சீனாவிற்கு வேண்டப்படாத சர்வதேச சக்தி, சீனாவினைத் துண்டாடலாம் என்ற அச்சத்தினால் அதிகாரப்பகிர்வு மீளவும் மத்திய குழுவினால் கையேற்கப்படலாம் என்ற நிலையும் இன்று காணப்படுகிறது.

( பிரதி செவ்வாய் தொடரும்)

# 3 வருடம் கஷ்டப் பிரதேசத்தில் ஆசிரியர்கள் பணிபுரியவேண்டும்

## வட-கிழக்கு மாகாண கல்வியமைச்சு உத்தரவு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் மூன்று வருடங்கள் கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்ற வேண்டுமென்று வட- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் வட - கிழக்கு மாகாணத்திலுள்ள 24 கல்வி வலயங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


ஆசிரியர்கள் தொடர்ச்சியாக நகரப் பகுதிப் பாடசாலைகளில் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்திக்கவே இந்த ஏற்பாட்டினை வட - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு செய்துள்ளது.

(க)

# வெற்றி எம்பக்கத்தில் வந்துவிட்டது; சதாம் தொலைக்காட்சியில் உரை!

## கடுமையான சண்டை தொடர்கின்றது



பிடிபட்ட கைதியின் பேட்டி

அமெரிக்காவின் தாக்குதல் தீவிரமடைந்து வருகின்றநிலையில்- ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று மீண்டும் அந்நாட்டு தொலைக் காட்சியில் தோன்றி உரை நிகழ்த் தினார்.

ஒலிவ் பச்சை நிறச் சீருடையில் தோன்றிய அவர்- 'வெற்றி எம்பக் கத்தில் வந்துவிட்டது' என ஈராக்கிய மக்களுக்கு அறிவித்தார்.

ஈராக்கிய மக்கள் துணிவுடனும், வீரத்துடனும் போரிட வேண்டும் என் றும் அவர் அழைப்பு விடுத்தார்.

பக்தாத்தை நோக்கி முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டுவரும் அமெ ரிக்க- பிரிட்டிஷ் படைகள்- கண்ட பின்னடைவு பற்றிய செய்திகள் உலகிலுள்ள ஊடகங்கள் வழியா கப் பரவிய வேளையில், சதாமின் உரையும் இடம்பெற்றது குறிப்பிடத் தக்கது.

சதாமின் உரை நேரடியாகவே ஒளிபரப்பானதா அல்லது பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பானதா என்பது பற்றித் தெரியவரவில்லை.

இதேவேளை, பக்தாத்திற்கு தெற் கேயுள்ள கர்பாலா நகரில்- ஈராக் கியக் குடியரசு இராணுவத்துடன்- அமெரிக்காவின் ஆயுதந்தாங்கிய



சதாம் ஹுசைன்

ஹெலிகொப்ரர்கள் கடுமையான சம ரில் ஈடுபட்டுள்ளன.

நஸ்ரியா, பஸ்ரா ஆகிய இடங் களிலும் ஈராக்கியப் படைகளின் எதிர்த் தாக்குதல்கள் பலமாக இருப்பதாக அமெரிக்கப் படைகள் அறிவித்துள் ளன.

# பிரிட்டிஷ் படைகள் மீது சினைப்பர் தாக்குதல்!

## தென் ஈராக்கில் இருவரைக் காணவில்லை என அறிவிப்பு



ஈராக்கில் பிரிட்டிஷ் படைகள் கண்காணிப்புக் கடமையில்.

(லண்டன்)

ஈராக்கின் தென்பகுதியில் பிரிட்டிஷ் படை வாக னங்கள் மீது, ஈராக்கியர்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு பிரிட்டிஷ் படையினர் காணாமற்போயுள்ளனர்.

தென் ஈராக்கினுள் நுழைந்த பிரிட்டிஷ் படையினர் தொடர்ந்தும் - ஈராக்கியப் படையினரின் சினைப்பர் மற்றும் சிறியரக ஆயுதத் தாக்குதல்களுக்கு இலக்காகி வருகின்றனர்.

இதுவரை, காணாமற்போன படையினர் பற்றிய விபரங்கள் தெரியவரவில்லையென பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளபோதிலும் - இவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிபட்டிருக்கலாம் எனவும் அறிவிக் கப்படுகின்றது.

பஸ்ரா மற்றும் உம் காசிர் பகுதிகளின் பெரும் பகுதிகளைத் தாம் பிடித்துள்ளபோதிலும் - ஈராக்கி யரின் எதிர்ப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொடர்ந்து வருவதாக - பிரிட்டிஷ் படையதிகாரியான குரூப் கப்டன் அல் லொக்வூட தெரிவித்தார்.

இதேவேளை - திட்டமிட்டபடி யுத்தம் நடைபெற்று வருவதாகவும், தமது படைகளின் முன்னேற்றம் இடைநிறுத்தப்படமாட்டாதெனவும் - பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அறிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் துருப்புக்களுக்காக, விசேட உரையாற்றிய அவர், இனிக் கடுமையான தருணங்களும் காத்தி ருப்பதாகவும், அதுபற்றிக் கவனமாக இருக்கவேண்டு மெனவும் எச்சரித்தார்.



வீதிச் சோதனையில் பிரிட்டிஷ் படையினர்

# ஈராக்கிற்குள் நுழைய வேண்டாம்; துருக்கி மீது பாய்கிறது அமெரிக்கா

## ஜோர்ஜ் புஷ் பகிரங்க எச்சரிக்கை விடுத்தார்

(வொஷிங்ரன்)

ஈராக்கிற்குள் படைகளை அனு ப்பி தேவையற்ற பிரச்சினைகளை குர்திஷ் மக்களுடன் உருவாக்க வேண்டாமென - அமெரிக்க ஜனாதி பதி ஜோர்ஜ் புஷ் துருக்கியை எச் சரித்துள்ளார்.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஆயிரம் துருக்கிய கொமாண் டோக்கள், குர்திஷ் மக்கள் வாழும் பகுதிகளுக்குள் ஊடுருவியதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக் கப்படுகின்றது.

குர்திஷ் மக்களுடன் தாம் இணைந்து செயற்பட்டுவரும் வேளை யில் - துருக்கியப் படைகள் ஏற்க னவே குர்திஷ் மக்களுடன் கொண் டுள்ள பகைமை உணர்வின் அடிப் படையில் பிரச்சினைகளை உரு வாக்கினால் தாம் பொறுத்துக் கொள் ளப் போவதில்லை என்றும், அமெ ரிக்காவின் உறுதியான முடிவு இது வென்றும் ஜோர்ஜ் புஷ் எச்சரித் துள்ளார்.



ஊடுருவும் துருக்கியர்கள்

அமெரிக்க - பிரிட்டிஷ் படையினரின் விமானங்க ளுக்காகத் தனது விமா னத் தளங்களைத் திறந்து விட்டிருக்கும் துருக்கி - ஈராக்கிய அகதிகள் தனது நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதே தனது நோக் கம் என்றும், இதற்கா கவே துருக்கிய கொமாண் டோக்கள் எல்லைக்கு வர வழைக்கப்பட்டார்கள் என்றும் தெரிவித்துள் ளது.

## உலகவலம்

# பஸ்ராவில் குடிநீருக்காக அலையும் மக்கள்

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான பஸ்ராவில் நடந்த சண் டைகளில் 77 பொதுமக்கள் கொல்




லப்பட்டனர்.


இதேவேளை, அங்கு கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதாகவும், மக்கள் குடிநீருக்காக அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகி றது.

# ஈராக் போர்க்களம்




ஈராக்கியர் ஒருவர் சுடப்பட்டு வீழ்ந்து கிடக்க, அச்சமுடன் கையை உயர்த்தி நிற்கும் ஈராக்கியர் - முன்னே - வீதியில் அமெரிக்கப் படைகள்.




தொடரும் போருக்கு எதிர்ப்பு ஒரு பக்கம், ஆதரவு மறுபக்கம்



தரையிலும் கடலிலும் பாய்ந்து செல்லும் ஏவுகணைகள்



பதுங்கியவாறு தாக்குதலில் ஈடுபடும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை தொடர்ச்சியாகவே நடக்கும்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சை, ஏப்ரல் 21 ஆம் திகதி ஆரம்பமாகி மே மாதம் 20 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடை பெறவிருக்கின்றது.

பரீட்சைகள் இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பரீட்சைகள் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கின்றன.

இம்முறை 2 இலட்சத்து 51 ஆயிரத்து 777 பரீட்சார்த்திகள் இப்பரீட்சையில் தோற்றவிருக்கின்றனர்.

# இனவாதிகளின் செய்திகளை இயன்றவரையில் தவிருங்கள்

## கொழும்பு தினசரிகளிடம் அரசு கோரிக்கை

நாட்டினுடைய சமாதானத்தைக் குழப்பும் இனவாத சக்திகளின் செய்திகளை இயன்றளவு தவிர்க்கும்படி, கொழும்பிலுள்ள ஊடகங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் வகையில், ஜே.வி.பி. மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் பல்வேறு பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இவர்களுடைய செய்திகள் சமாதான முயற்சிகளைப் பாதிப்பதனால், மக்கள் மத்தியில் ஏற்படும் குழப்ப நிலையைத் தணிக்க, இன வாதக் கட்சிகளின் செய்திகளுக்கு கொழும்பிலுள்ள ஊடகங்கள் தங்கள் நிறுவன மட்டத்திலேயே கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுமாறு, செய்தி ஊடகங்களுக்கு அரசாங்கம் அறிவித்துள்ளது.

(01)

### பாதுகாப்பு ஊழியர் மீது தாக்குதல்

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு ஊழியருக்கும், பொதுமகன் ஒருவருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கைகலப்பில், பாதுகாப்பு ஊழியர் ஒருவர் முகப் பகுதியில் காயங்களுக்கு உள்ளானார். ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள உறவினரைப் பார்வையிடச் சென்ற இளைஞர் ஒருவரை வழிமறித்த மேற்படி ஊழியர், வேறு சிலரை விடுதிக்குச் செல்ல அனுமதித்ததாலேயே இக் கைகலப்பு ஏற்பட்டது. (111)

# புலிகளின் அரசியல் உபகுழு இம்மாத இறுதியில் ஒஸ்லோவுக்கு

உலகின் பல்வேறு நாடுகளின் சமஷ்டி அரசியலமைப்பை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் உபகுழுவில், 16 விடுதலைப் புலி உறுப்பினர்களும், வடக்கு - கிழக்கிலிருந்து 5 நிபுணர்களும் அங்கம்வகிக்கின்றனர்.

இக் குழுவினர் இம்மாதம் 30 ஆம் திகதி ஒஸ்லோ செல்லவுள்ளனர். அங்கிருந்து சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கும் இவர்கள் செல்லவுள்ளனர்.

# எதிர்க்கட்சிகளின் தொழிற்சங்கங்கள் நாளை வேலை நிறுத்தப் போராட்டம்

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக் கோரி, நாளை நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி ஆதரவுள்ள தொழிற்சங்கங்கள் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தில், தாம் ஈடுபடப்போவதில்லையென தேசிய புகையிரத சேவை தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன, சமாதானம் தொடர்ந்து நிலவும் பட்சத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளதையடுத்தே, தாம் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதில்லை என புகையிரத சேவை தொழிற் சங்கம் அறிவித்துள்ளது. (01)

# எனது பாதுகாப்புப் பிரிவினருக்கு பதவி உயர்வுகள் இல்லையா?

## பொலிஸ்மா அதிபரிடம் ஜனாதிபதி கேள்வி

பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றபோதிலும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் உள்ளோருக்கு அத்தகைய பதவி உயர்வுகள் வழங்கப்படுவதில்லை என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொலிஸ்மா அதிபரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலுள்ள சுமார் 1400 பேரில் 19 பேர் மாத்திரமே பதவி உயர்வுபெற்றுள்ளனர். ஆயினும், நூற்றுக்கணக்கான சாதாரண பொலிஸார், அதிகாரிகளாகப் பதவி உயர்த்தப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இத்தகைய பதவி உயர்வுகள், அரசியல் அழுத்தங்கள் மூலம் வழங்க்ப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை, பதவி உயர்வுகள் பெறக்கூடிய தகுதியுள்ள அதிகாரிகள் தொடர்பான விபரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமான அறிக்கையை ஒரு வாரத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# அப்பாச்சே ஹெலி...

வெளியிட்டுள்ள ஈராக்கிய தகவற்துறையமைச்சர், சிறிய தொகையான தமது விவசாயிகளும் கிளர்ச்சி வீரர்களும் இரு அப்பாச்சே ஹெலிகளைச் சுட்டு வீழ்த்தியுள்ளனர் என்றார்.

வீழ்ந்த ஹெலிக்கு முன்பாக ஈராக்கியர் துப்பாக்கிகளை மேலே உயர்த்தியபடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதையும், அருகில் அமெரிக்கப் படையினரின் இரு தலைக் கவசங்கள் கிடப்பதனையும் ஈராக்கிய தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

இதேவேளை, ஈராக் கைப்பற்றிய அமெரிக்கப் போர்க்கைதிகளை தொலைக்காட்சியில் காட்டுவது, ஜெனீவா மனித உரிமை சாசனத்துக்கு விரோதமானது என, அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷும் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்.்.பீல்ட்டும் வெளியிட்ட எச்சரிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஈராக்கிய தகவற்துறையமைச்சர், இவர்கள் குற்றவாளிகளான சியோனிசவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பவர்கள். எனவே, தாம் பிடிக்கும் கைதிகளை தொலைக்காட்சியில் காட்டியே தீருவோம் எனக் கூறியுள்ளார்.

### சிரியா மீது அமெரிக்கா ஏவுகணை

சிரிய எல்லையருகே அமெரிக்காவின் ஏவுகணை ஒன்று வீழ்ந்ததில் ஐந்து சிரியர்கள் கொல்லப்பட்டனர், 10 பேர் காயமுற்றனர். பயணிகள் பஸ் ஒன்றின் மீது இந்த ஏவுகணை வீழ்ந்துள்ளது.இதற்கு சிரியா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

சில நாட்களுக்கு முன்பு இதே போன்று அமெரிக்க ஏவுகணைகள் ஈரான் மீதும் வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஈராக் படையின் கெரில்லாத் தாக்குதல்

ஈராக் படையினர், அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் மீது கெரில்லாத் தாக்குதல் வடிவிலான போராட்டத்தை ஆரம்பித்துள்ளதால், போர் நீண்டதும் கடினமானதுமாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் விநியோகப் பாதைகளில் வைத்தும், நகருக்குள் நுழையும் படையினரை கெரில்லாத் தாக்குதல் மூலமும் - ஈராக் படைகள் தாக்குவதால், ஒரு மரபுப் போரை அல்லாது கெரில்லாப் போரை எதிர்கொள்ளும்நிலை கூட்டணிப் படைகளுக்கு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### அமெரிக்காவின்...

ரடார் மூலம் எதிரியின் தாக்குதல் இடத்தை அடையாளம் காட்டும் நவீன தொழில்நுட்பம் என்பவற்றை இது கொண்டுள்ளது.

கணினியின் மூலம் ஏனைய விமானிகளுக்கும் தரைத் தளத்துக்கும் தகவல் அனுப்பும் வசதியும் இதில் உண்டு. 1991 ஈராக்கியப் போரில் இது பெரும்பங்கு வகித்திருந்தது.

### இலங்கையின்...

கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

எனினும், ஈராக் போர் எதிர்பார்க்கப்பட்டதிலும் நீண்டு செல்லும் நிலை காணப்படுவதால் எதிர்காலத்தில் அமெரிக்கா - இலங்கையின் தரிப்பிட உதவியைக் கோரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மேலும்...

தித்துறை மாவட்ட நீதிபதி மற்றும் பொலிஸார் சடலங்களைப் பார்வையிட்டனர். இந்தச் சடலங்கள யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளியன்று முல்லைத் தீவுக் கடற்பரப்பில், சீன மீன்பிடிப் படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து, நேற்றுமுன்தினம் நான்கு சடலங்கள் - குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில் கரையொதுங்கியிருந்தன. இவற்றுடன் கரையொதுங்கிய சடலங்களின் தொகை 7 ஆகியுள்ளது. இதேவேளை, மேற்படி சடலங்களை அடையாளம் காணும் பொருட்டு, சீனத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## பக்தாத்திலிருந்து சில காட்சிகள்...



### கல்வி வலயங்கள்...

இவர்களது மறியற் போராட்டத்தால், வலயக் கல்வி அலுவலகங்களின் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தன. ஊழியர்கள் அலுவலகத்திற்கு வந்துவிட்டு வீடு திரும்பினர்.

தொண்டராசிரியர்களின் போராட்டத்திற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

வட-கிழக்கு ரீதியாக இவர்களின் தொடர் மறியற்போராட்டங்களும், உண்ணாவிரதப் போராட்டங்களும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

(ரா,69)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.60 | 97.00 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.30 | 155.79 |
| 1 யூரோ | 106.30 | 107.60 |
| 1 சுவிஸ் பிராங் | 72.35 | 73.66 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.01 | 60.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.85 | 25.85 |

கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை

CORELDRAW, PAGE MAKER இல்
அனுபவமுள்ள கணினி பக்க வடிவமைப்பாளர்கள்
எதிர்வரும் 30-03-2003 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பொது முகாமையாளரை நேரில் வந்து சந்திக்கவும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.